# நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பிலான செயலாற்றல் கணக்காய்வு - 2019



அறிக்கையின் இலக்கம்: பீஈஆர்/2020/A/எஸ்டீஜீ/2

---

## தேசிய கணக்காய்வு அலுவலகம்

# **உள்ளடக்கம்**


| தொடர் இல. | | விபரம் | பக்க இல. |
|---|---|---|---|
| 01. | | நிறைவேற்றுப் பொழிப்புரை | 1 |
| 02. | | அறிமுகம் | 7 |
| | 2.1 | பின்புலம் | 7 |
| | 2.2 | கணக்காய்விற்கான அதிகாரம் | 8 |
| | 2.3 | தலைப்பினை தெரிவு செய்தமைக்கான காரணம் | 9 |
| | 2.4 | கணக்காய்வு பிரவேசம் | 9 |
| | 2.5 | கணக்காய்வு நோக்கங்கள் | 9 |
| | 2.6 | கணக்காய்வு அளவைக் கட்டளைகள் | 10 |
| | 2.7 | கணக்காய்வு அளவுக்கட்டளைகளின் மூலங்கள் | 11 |
| | 2.8 | நடைமுறை | 13 |
| | 2.9 | கணக்காய்வு நியமங்களுடனான தொடர்பு | 13 |
| | 2.10 | கணக்காய்வு விடயப்பரப்பு | 13 |
| | 2.11 | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பொதுமக்களின் பங்களிப்பு | 14 |
| 03. | | விரிவான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பரிந்துரைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் கருத்துரைகள் | 15 |
| | 3.1 | 2030 நிகழ்ச்சி நிரலினை தேசிய சூழலுடன் இணைத்தல் | 15 |
| | 3.2 | பாதீட்டு முன்மொழிவுகளினூடாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தல் | 24 |
| | 3.3 | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வளங்கள் மற்றும் இயலுமையை இனங்காணல் | 46 |
| | 3.4 | 2030 நிகழ்ச்சி நிரலின் பின்தொடர்தல், மீளாய்வு, செயற்படுத்தலின் செயன்முன்னேற்றத்தினை அறிக்கையிடல் | 51 |
| 04. | | பரிந்துரைகள் | 64 |
| 05. | | தீர்மானம் | 66 |
| | | பின்னிணைப்புகள் | 67 |

## 01. நிறைவேற்றுப் பொழிப்புரை

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல் மிகவும் சிறந்ததொரு பூமிக்கான உலகளாவிய மற்றும் உருங்கிணைந்த நோக்காகும். நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி என்பது எதிர்கால சந்ததியினருக்கு அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு உள்ள இயலுமையை அபாயத்தில் இட்டுச்செல்லாது, தற்போதைய தேவைகளை பூர்த்தி செய்யும் அபிவிருதியே ஆகும். இலங்கை அரசம் பல்வேறு படிமுறைகளை முன்னெடுப்பதன் மூலம் இந்த நிகழ்ச்சி நிரலினை நடைமுறைப்படுத்துவதற்கு கடப்பட்டுள்ளது. இது தொடர்பில் பாராளுமன்றத்தினால் குறித்த அமைச்சுகளுடன் இணைப்பு செய்யும் பணிகள் மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களின் அறிவுரைகளை வழங்கும் பொருட்டு பாராளுமன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவொன்றினை நியமித்தல், நிலைபேறான அபிவிருத்திக்கு பொறுப்பான வரிசை அமைச்சுகளாக 2015 ஆம் ஆண்டின் போது நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சினை தாபித்தல், 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தினை நடைமுறைப்படுத்தல், நிலைபேறான அபிவிருத்தி சபையினை நிறுவுதல் ஆகியன எடுக்கப்பட்டுள்ள பிரதான பணிகளாகும்,

அதியுயர் கணக்காய்வு நிறுவனமாக இலங்கையின் தேசிய கணக்காய்வு அலுவலகம், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள அரச நிறுவனங்களின் செயற்திறனை மற்றும் விளைதிறனை அதிகரிப்பதன் மூலம் அவற்றின் கணக்களிதகைமை, வெளிப்படைத்தன்மை, நேர்மை ஆகியவற்றை பலப்படுத்தும் நோக்கில் மற்றும் அதன் மூலம் குடிமக்களின் வா்ழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்காக நிலைபேறான அபிவிருத்திநோக்கங்களை அடைந்துகொள்ளல் தொடர்பான செயலாற்றல் கணக்காய்வு 2016 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் 2018 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் வரையிலும் தெரிவு செய்யப்பட்ட அரச நிறுவனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டது. 2018 ஆகஸ்ட் மாதம் முதல் 2019 திசெம்பர் வரையான காலப்பகுதியினுள் அது தொடர்பில் பொறுப்பு கூறும் அரச நிறுவனங்களால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

2019 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் வரையிலுமான இலங்கையின் தூரநோக்கு 2025 ஆம் ஆண்டு வரையிலுமானதுடன், அரச முதலீட்டு திட்டமொன்றாக (2017-2020) முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் முதல் இலங்கையின் தேசிய தூரநோக்காக சுபீட்சமான நோக்கு பயன்படுத்தப்படுகின்றது. அந்த நோக்கின் பிரகாரம் 2030 ஆம் ஆண்டின் போது இலங்கையின்நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்காக

அமைச்சரவையின் அமைச்சுக்களை மீள ஒழுங்கமைத்தல் மற்றும் அதற்காக முறையான திட்டமொன்றினை தயாரிப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. 2025 ஆம் ஆண்டின் நோக்கு மற்றும் அரச முதலீட்டு திட்டத்தினுள் (2017-2020) நிலைபேறான அபிவிருத்தி சுற்றாடல் சார்ந்து காணப்படுவதனை விட பொருளாதார மற்றும் சமூகம் சார்ந்ததாக ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது. நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி இலங்கையை 2030 ஆம் ஆண்டளவில் பயணிக்க வைப்பதற்காக தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டின் போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய சுற்றறிக்கைகளை மீளாய்வு செய்யும் போது அவை சுற்றாடல், சமூக மற்றும் பொருளாதாரம் ஆகிய விடயங்களினதும் சமனான தன்மையை பாதுகாக்கும் வகையில் பின்பற்றப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் விதிகள் அறிமுகம் செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் அரசின் பொருளாதார பணிகளை செயற்படுத்தும் 08 பிரிவுகளின் கீழ் 322 செயற்திட்டங்களில் சுமார் 50 சதவீதமானவை மாத்திரம் ஆரம்ப அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், 19 சதவீதமானவை மாத்திரம் இரண்டாவது அங்கீகாரத்தினை பெற்றிருந்தன. 2030 நிகழ்ச்சி நிரலினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிதி திட்டங்களுடன் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை ஒன்றாக அணிதிரட்டும் தேவைப்பாடு எழுந்துள்ளது. 2018 ஆம் ஆண்டிற்கான தேசிய பாதீட்டில் பிரதான செயற்திட்டங்களுடன், 78 இலக்குகள் மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான தேசிய பாதீட்டில் பிரதான செயற்திட்டங்களுடன், 75 இலக்குகள் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும், நிலைபேறான அபிவிருத்தியை நோக்காக கொண்ட தேசிய கொள்கையொன்று மற்றும் மூலோபாயமொன்று தயாரிக்கப்படாமை, அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் (Disaggregation) தரவுகள் இல்லாதிருந்தமை, நிறுவன மட்டத்திலான செயலாற்றல் குறிகாட்டிகளை அனைத்து அமைச்சினாலும் 2018 ஆம் ஆண்டு முதல் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த அமைச்சு அல்லது தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்தினால் அவற்றை தேசிய ரீதியில் அளவீடு செய்யும் பணி இடம்பெற்றிராமை, நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தேசிய கொள்கை அல்லது மூலோபாயத்திற்கு இணங்க அரச நிறுவனங்கள் தமது விடயப்பரப்புடன் தொடர்புடையதாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உள்ளடக்கிய நிலைபேறான அபிவிருத்தி மூலோபாயங்களை தயாரித்து அவற்றை நிலைபேறான அபிவிருத்தி சபைக்கு வழங்கியிராமை, தூரநோக்கு 2025 இன் ஒரு இலக்கான இலங்கையின் வருடாந்த தனிநபர் வருமானத்தை மொத்த தேசிய உற்பத்தியின் ஐ.அ.டொலர் 5,000 வரை அண்மித்தல் தொடர்பில் எதிர்பார்க்க முடியும் எனினும், எஞ்சிய இலக்குகளை அண்மித்தல் தொடர்பில் இலங்கைக்கு பெரும் பிராயத்தனம் தேவைப்படுகின்றது. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்காக நியமிக்கப்பட்ட

பாராளுமன்றத்தின் குழுவானது 2018 நவம்பர் மாதம் 20 ஆந் திகதி முதல் செயற்படாமை போன்ற விடயங்கள் இங்கு முக்கிய அவதானிப்புகள் ஆகும்.

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் ஆகிய 03 விடயங்களும் சமநிலையுடன் பேணப்பட வேண்டும். நிதி திட்டங்களின் கீழான பாதீட்டு முன்மொழிவுகளின் பிரகாரம் சுற்றாடல் செயற்திட்டங்களுக்காக 2018 ஆம் ஆண்டின் போது 17 செயற்திட்டங்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது 17 செயற்திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இலங்கையானது சுற்றாடல் செயலாற்றல் குறிகாட்டியில் 2018 ஆம் ஆண்டின் போது 60 ஆம் இடத்தை பெற்றிருந்ததுடன், அது 2020 ஆம் ஆண்டின் போது 25 ஆம் இடத்தை அடையும் வகையில் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் (2017-2020) இலக்கிடப்பட்டிருந்தன. எனினும், அந்த நிலைமையை அடைதல் தொடர்பிலான அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பீடு செய்யும் போது அது 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக குறைவடைந்திருந்தமை, கொழும்பு நகரின் வளியின் நிலைமை உலக சுகாதார ஸதாபனத்தின் (WHO) நியமங்களை விஞ்சியிருந்தமை, யானைகள் மற்றும் மனிதர்களுக்கடையேயான மோதல்கள் அதிகரித்தமை, உலக காலநிலை அபாய குறிகாட்டியில் இலங்கை இரண்டாம் இடத்தினை அடைந்தமை போன்ற விடயங்களின் அடிப்படையில் இலங்கையின் சுற்றாடல் சமநிலையை பேணல் தொடர்பில் இலங்கையின் ஆயத்தம் தொடர்பில் சிக்கல்கள் எழுந்துள்ளன.

இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி பயணிக்கும் பிரதான பொறுப்பினை வகிக்கும் நிறுவனங்களின் செயன்முன்னேற்றத்தினை அவதானிக்கும் போது கட்டிடங்கள் ஆராச்சி நிறுவகம் 2019 நவம்பர் வரையிலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் மேற்கொண்ட செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றத்தினை அளவிடுவதற்காக தரவு கட்டமைப்பில் உள்ளடக்குதல் இடம்பெற்றமையால் செயன்முன்னேற்றத்தினை அளவிட முடியாதிருந்தமை, சுற்றாடல் அதிகாரசபையின் 2019 நவம்பர் மாதத்திற்குரிய தரவுகளின் பிரகாரம் நகர திண்மக்கழிவுகளில் சுமார் 84 சதவீதம் உரிய முறையில் அகற்றப்படாமை, தேசிய மீள்சுழற்சி விகிதமானது 5 சதவீதமாக இருந்தமை, தனிநபர் அபாயகரமான கழிவு உற்பத்தியானது 2018 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலும் 9.5 கி.கிராம்களிலிருந்து 13 கி.கிராம்கள் வரை அதிகரித்தமை, அபாயகரமான கழிவின் சுத்திகரிப்பு விகிதமானது குறைவடைந்தமை, எரியூட்டப்படும் மருத்துவக் கழிவுகளின் சதவீதம் குறைவடைந்தமை, மீள்சுழற்சிக்காக இறக்குமதி செய்யப்படும் இலத்திரனியல் இறக்குமதி வீதம் மாத்திரம் அதிகரித்தமை போன்ற செயலாற்றல் தகவல்கள் இதன் போது முக்கிய இடத்தினை வகித்தன.

எதனையும் கைவிடாமை எனும் எண்ணக்கரு நிலைபேறான அபிவிருத்தியில் மிகவும் முக்கியமாக எண்ணக்கருவொன்றாவதுடன், அது இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் 2016 இன் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின்

மூலம் அனைத்து நபர்களுக்கும் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை இலவசமாக வழங்குவதற்கும் சமூக பாதுகாப்பு முறைமைகளை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இலங்கை மக்களுக்கு கிடைத்துள்ள பிரதிபலன்களின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி குறிகாட்டியானது கடந்த வருடங்களுக்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டின் போது உயர்வான பெறுமதியொன்றினை கொண்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் தேசிய பாதீட்டு மதிப்பீட்டின் கீழ் விசேட தேவைப்பாடுடைய நபர்களுக்காக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டிருந்தது. அதற்காக 14 இலக்குகளின் கீழ் செயற்திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. எனினும், 2019 ஆம் ஆண்டின் போது அதற்காக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டிருக்கவில்லை. தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் குறித்த விசேட தேவைப்பாடுடைய நபர்கள் தொடர்பில் 14 இலக்குகளுக்காக குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த தரவுகளில் அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 9 இலக்குகள் மாத்திரமே குறிப்பிடப்பட்டிருந்தன. இலங்கையின் விசேட தேவைப்பாடுகளுடைய நபர்கள் தொடர்பில் 2001 ஆம் ஆண்டில் தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புகளின் போது பாதங்களில் குறைபாடுகளை உடைய மற்றும் கல்வியினை பெற்றிராதவர்கள் அதிகளவில் காணப்படுவதாகவும், அவர்களில் சுமார் 73 சதவீதமானோர் மாத்திரம் தமது உறவினர்களால் பராமரிக்கப்படுகின்றமையும் அறிக்கையிடப்பட்டிருந்தது.

நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலினை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வளங்கள் மற்றும் இயலளவினை பெற்றுக்கொள்ளும் தற்போதைய மூலோபாயமானது தேசிய வரவு செலவு திட்டத்தின் மூலம் நிதியினை பெற்றுக்கொள்ளல் ஆகும். அதன் போது 2018 ஆம் ஆண்டிற்கான தேசிய பாதீட்டின் (கடன் செலுத்தல்கள் கழிக்கப்பட்டு) நிதியில் 14 சதவீதமானவை பிரதான செயற்திட்டங்கள் மற்றும் இலக்குகளுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டின் தேசிய பாதீட்டின் (கடன் செலுத்தல்கள் கழிக்கப்பட்டு) நிதியில் 17 சதவீதமானவை பிரதான செயற்திட்டங்கள் மற்றும் இலக்குகளுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தன. எனினும் அண்மைக்கால வருமான பகுப்பாய்வின் போது அரச வருமானத்தினை விஞ்சி அரச செலவினங்கள் காணப்படுகின்றமை, ஏற்றுமதி வருமானத்தினை விஞ்சி இறக்குமதி செலவினம் காணப்படுகின்றமை, பாதீட்டு பற்றாக்குறை,ரூபாயின் பெறுமதி இழப்பு, அரச கடன் அதிகரித்தல், வரவு செலவு திட்ட பற்றாக்குறை காரணமாக தேவையான நிதி வளங்களை முகாமை செய்யும் தேவைப்பாடு ஏற்பட்டிருந்தது. இயலளவு அபிவிருத்தியின் போது இலங்கை தொழில் சந்தையினுள் அரச பல்கலைக்கழகங்களின் பட்டதாரிகளில் விஞ்ஞானம், கணிதம் மற்றும் தொழில்நுட்ப பட்டதாரிகளின் எண்ணிக்கையானது அண்மிய காலமாக சராசரியாக சுமார் 28 சதவீதமாக காணப்பட்டமை ஆகிய பிரதான சவால்கள் நிலவின.

இலங்கையானது மில்லேனியம் அபிவிருத்தி நோக்கங்களை அடையும் முறை (2000-2015) வரையிலும், மற்றும் 2015 ஆம் ஆண்டு முதல் 2030 ஆம் ஆண்டு வரை நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதனை அளவீடு செய்வதற்காக குறிகாட்டிகள் மற்றும் அடிப்படை தரவுகள் காணப்பட வேண்டும். இதற்காக தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் 169 இலக்குகளில் 49 இற்காக குறிகாட்டிகள் மற்றும் அடிப்படை தரவுகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 26 இலக்குகளுக்காக குறிகாட்டிகள் மற்றும் அடிப்படை தரவுகள் தயாரிக்கப்பட்டவாறு உள்ளது. ஏனைய நிறுவனங்களால் தயாரிக்கப்பட வேண்டிய 131 குறிகாட்டிகளுக்காக அந்த நிறுவனங்களிடம் தரவுகள் காணப்பட்ட போதிலும், அவற்றை தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் இணைந்து தேசிய தரவுக் கட்டமைப்பில் ஒருங்கிணைத்திருக்கவில்லை. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதனை பரீட்சிப்பதற்காக அரச நிறுவனங்கள் செயலாற்றல் குறிகாட்டிகளை (KPI) தயாரித்து தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ள போதிலும், குறித்த நிறுவனங்கள் அல்லது வரவு செலவு திட்ட திணைக்களத்தினால் குறிப்பிட்ட குறிகாட்டிகளின் செயன்முன்னேற்றத்தினை அளவீடு செய்தல் 2019 ஆம் ஆண்டு வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், 2030 நிகழ்ச்சி நிரலின் அமுல்படுத்தல், செயற்முன்னேற்றத்தினை மேற்பார்வை செய்தல், பின்தொடர்தல் மீளாய்வு மற்றும் அறிக்கையிடலுக்கான பொறிமுறையை தயாரிப்பதற்கு சட்டரீதியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த பணிகளுக்காக டிஜிட்டல் தரவுக் கட்டமைப்பொன்றினை தயாரித்தல், தரவுக் கட்டமைபப்பு முறைமையொன்றினை தயாரித்தல் இடம்பெற்றவாறு உள்ளது. 17 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் 169 இலக்குகளின் பிரகாரம் மற்றும் INTOSAI நியமம் 5130 இன் 2.22 இன் பிரகாரம் இலங்கையில் தற்போது காணப்படும் செயன்முன்னேற்றத்தினை சர்வதேசத்திற்கு அறிக்கையிட வேண்டும். 2018 ஆம் ஆண்டின் போது நிலைபேறான அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் இலங்கை அரசிற்காக தன்னார்வ தேசிய மீளாய்வு ஐக்கிய நாடுகள் சபைக்கு முன்வைக்கப்பட்டிருந்தது. அதன்போது இனங்காணப்பட்ட குறைபாடுகளாவது, வறுமை ஒழிப்பு குறிகாட்டியின் நீழான சனத்தொகை குறைவடைந்திருந்த போதிலும், தேசிய வறுமை வீதம் குறைவடைந்திருந்த போதிலும், பிராந்திய முரண்பாடுகள் நிலவுகின்றமை, இயற்கை அனர்த்தங்களின் காரணமாக வறுமை அதிகரித்தல், கைத்தொழில்துறையின் பங்களிப்பு குறைவடைதல், தொற்றாத நோய்களின் பரவல் அதிகரித்தல், குடிநீரின் தரம் குறைவடைதலும் சிறுநீரக நோய்கள் ஏற்படலும், பாராளுமன்றத்தின் பெண்களின் பிரதிநித்துவம் குறைவடைதல், கல்வி கற்காத, வேலைவாய்ப்பற்ற மற்றும் பயிற்சிகளை பெற்றிராத இளைய சமூகத்தினரின் வீதமானது 26 சதவீதமாக காணப்படுகின்றமை, அபிவிருத்தி மானியங்கள் மற்றும் நேரடி வெளிநாட்டு

முதலீடுகள் குறைவடைந்தமை, உலகளாவிய நிறுவனங்களில் இலங்கையின் பிரதிநிதித்துவம் குறைவடைதல் ஆகியன பிரச்சினைகளாக குறிப்பிடப்பட்டிருந்தன. 17 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் செயன்முன்னேற்றம் மக்களுக்கு, நிர்வாகத்திற்கு மற்றும் பாராளுமன்றத்திற்கு அறிந்துகொள்ளும் நோக்கில் வழங்கும் நடைமுறையொன்று 2019 திசெம்பர் 15 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிராததுடன், அது தொடர்பாக கவனம் செலுத்தி 2030 நிகழ்ச்சிநிரலினை நடைமுறைப்படுத்துவதற்காக பினவரும் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன.

i. அரச நிறுவனங்கள் அவர்களின் விடயப்பரப்பிற்கு இணங்க நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் மூலோபாயங்களை தயாரிப்பதற்குரிய தகவல்களை நிலைபேறான அபிவிருத்தி சபைக்கு வழங்குவதன் மூலம் நிலைபேறான அபிவிருத்தி தேசிய கொள்கை மற்றும் மூலோபாயத்தினை தயாரிக்கும் நடைமுறையை துரிதப்படுத்தல்.

ii. தேசிய பாதீட்டின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI) குறித்த நிறுவனங்களுடன இணைந்து அளக்கும் நடைமுறையை அபிவிருத்தி செய்தல்.

iii. தேசிய அபிவிருத்தி தொடர்பான கொள்கையினை உருவாக்கும் போது 2019 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் சுபீட்சத்தின் நோக்கினுள் நிலைபேறான அபிவிருத்தி தேசிய திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சுகளை மீள ஒழுங்கமைத்தல் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி சபையினால் கண்காணிக்கப்படல்.

iv. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக சுற்றாடல் தொடர்பில் அதிக கவனம் செலுத்தல்.

v. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடையும் போது விசேட தேவையுடைய நபர்களுக்கு வழங்கப்படும் நலன்புரி வசதிகளை அதிகரித்தல்.

vi. இலக்குகளை அடைந்துகொள்ளல் பொருட்டு வளங்களை கோரலினை இலகுபடுத்தும் நோக்கில் அரச நிறுவனங்களுக்கு தெளிவான சுற்றறிக்கைகளை வெளியிடல்.

vii. அரச நிறுவனங்களால் தயாரிக்கப்பட வேண்டின 131 குறிகாட்டிகள் தொடர்பில் மதியுரைக் கோவைகளை வெளியிடல், பயிற்சி வழங்குதல் மற்றும் அது தொடர்பில் பின்தொடர்தல்.

viii. தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய 26 குறிகாட்டிகளை தயாரிக்கும் நடைமுறையை துரிதப்படுத்தல்.

ix. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இலங்கையில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக அனைத்து அரச நிறுவனங்களினதும் இணைப்பினை மேம்படுத்தல்.

x. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் ஒட்டுமொத்த செயன்முன்னேற்றத்தினை கண்காணித்தல் மற்றும மதிப்பீடு செய்வதற்கு இயலுமான வகையில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பொறிமுறையொன்றினை ஒழுங்கமைத்தல்.

xi. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளும் செயன்முன்னேற்றத்தினை கால அடிப்படையில் அறிக்கையிடும் நடைமுறையொன்றினை தயாரித்தல் மற்றும் அவை பொது மக்களுக்கு மற்றும் அது தொடர்பில் அக்கறை செலுத்தும் தரப்பினருக்கு பெற்றுக்கொள்ளும் நடைமுறையொன்றினை தயாரித்தல்.

## 2. அறிமுகம்

### 2.1 பின்புலம்

2015 ஆம் ஆண்டின் போது பரீஸில் 17 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் 169 இலக்குகள் என உலகினை பாதுகாப்பதற்கு அரச தலைவர்களால் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையில் இலங்கை கையொப்பமிட்டுள்ளமையால் இந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை வெற்றிகொள்வதற்காக இலங்கை கடப்பட்டுள்ளது. புவி வெப்பமடைதல் அதிகரித்தல் மற்றும் உலக காலநிலை மாற்றங்களின் பாதகமான விளைவுகளின் பங்குதாரர்களாக நாம் மாறியுள்ளமையை பெரும்பாலானோர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அங்கத்துவ நாடுகளிடையே உலகின் நிலவுகையை சான்றுபடுத்தும் வகையில் தமது நாடுகளின் அபிவிருத்தி திட்டங்களை நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளுடன் தொடர்புபடுத்த வேண்டியுள்ளது. அவ்வாறு இல்லையெனின் தமது நாட்டினுள் பிரதானமான அபிவிருத்தி பணிகளை நிறைவேற்றும் போது இந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும இலக்குகளை வழிகாட்டிகளாக பின்பற்ற வேண்டியுள்ளது.

நாம் கைத்தொழில் யுகத்தின இறுதி கட்டத்தினை அடைந்துள்ளோம். 2030 ஆம் ஆண்டின் போது நிலைபேறான அபிவிருத்தி யுகமே ஆரம்பிக்கவுள்ளது. அதனால் நாம் தற்போது மனிதர்களை கைத்தொழில் யுகத்திலிருந்து நிலைபேறான அபிவிருத்தி யுகத்திற்கு கொண்டு செல்லும் கால கட்டத்தில் உள்ளோம். 2030 இல் நிலைபேறான அபிவிருத்தி யுகம் ஆரம்பிப்பதனை சான்றுபடுத்தும் நோக்கில் உலக மக்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டமானது நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகள் ஆகும்.

ஐக்கிய நாடுகளின் அங்கத்துவ நாடு என்ற வகையில் இலங்கையும் பல்வேறு படிமுறைகளை முன்னெடுத்து 2030 நிகழ்ச்சி நிரலினை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது. நிலைபேறான அபிவிருத்திக்காக பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட குழுவொன்றினை நியமித்தல் மற்றும் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தினை சட்டபூர்வமாக்கல் போன்ற முயற்சிகள் அந்த நடைமுறைகளின் உள்ளடங்கும். நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் அமைச்சுகளுடன் பாராளுமன்றத்தின் பணிகளை இணைப்பு செய்யும் பணி மற்றும் நிபுணர்களின் ஆலோசனைகளை வழங்குவதற்கு பாராளுமன்றத்தினால் குழவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. மகாவலி அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் நிலைபேறான அபிவிருத்தி பிரிவனால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் பணியின் இணைப்பு, வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் அறிக்கையிடல் ஆகிய பணிகள் 2018 திசெம்பர் 10 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டின் 10 ஆந் திகதிய 2153/12 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி சபையானது நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்படுகின்றது.

நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் முதலாம் பகுதியின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி சபை நிறுவப்பட்டதுடன், அதற்கான அங்கத்தவர்கள் 2018 பெப்ரவரி மாதத்தின் போது நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 2.2 கணக்காய்விற்கான அதிகாரம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமையவும் தேசியக் கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 3(1)ஈ, 5(2), 12(ஏ) பிரிவுகளின் படி எனது தலைமையின் கீழ் இந்த செயலாற்றல் கணக்காய்வு மெற்கொள்ளப்பட்டது.

## 2.3 தலைப்பினை தெரிவு செய்தமைக்கான காரணம்

“எமது பிரபஞ்சத்தினை மாற்றியமைத்தல்” (Transforming our world) எனும் ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலினை பின்பற்றுவதற்காக இலங்கையும் அதன் அங்கத்துவ நாடு எனும் வகையில்

கடப்பட்டுள்ளது. அரசினால் இந்த கடமையினை நிறைவேற்றுதல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் முயற்சி தொடர்பில் மீளாய்வு மற்றும் பின்தொடர்தல் மூலம் பங்களிப்பினை வழங்கும் தேவைப்பாடும் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான பணிப்பொறுப்புகள் குறிப்பிடப்பட்டுள்ள INTOSAI நியம இலக்கம் 5130 இன் பிரகாரமும் சுயாதீனமானதொரு மீளாய்வின் தேவை சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளமையும் கணக்காய்விற்காக இந்த தலைப்பினை தெரிவு செய்தமைக்கான காரணங்கள் ஆகும்.

## 2.4 கணக்காய்வு பிரவேசம்

இங்கு பயன்படுத்தப்பட்டது கட்டமைப்புகள், பெறுபேறுகள் மற்றும் வினாக்களை அடிப்படையாக கொண்ட ஒருங்கிணைந்த பிரவேசமாகும்.

## 2.5 கணக்காய்வு நோக்கங்கள்

கணக்காய்வு நோக்கில் பார்க்கப்படும் மூன்று பிரதான நோக்கங்களை இனங்காண முடியும்.

(i) 2030 நிகழ்ச்சி நிரலினை அரச எந்தளவிற்கு அதன் தேசிய சூழலுக்கு ஈடுபடுத்தியுள்ளது என்பது.

(ii) 2030 நிகழ்ச்சி நிரலினை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வளங்கள் மற்றும் இயலுமைகள் அரசினால் இனங்காணப்பட்டு அவை பாதுகாக்கப்பட்டுள்ளதா என்பது.

(iii) அரசினால் 2030 நிகழ்ச்சி நிரலினை நடைமுறைப்படுத்தும் செயன்முன்னேற்றம் தொடர்பான கண்காணிப்பிற்கு, மீளாய்வு செய்வதற்கு மற்றும் அறிக்கையிடுவதற்கு பொறிமுறையொன்று நிறுவப்பட்டுள்ளதா என்பது.

## 2.6 கணக்காய்வு அளவைக் கட்டளைகள்

ஒவ்வொரு கணக்காய்வு நோக்கத்தினையும் அடைவதனை மதிப்பீடு செய்வதற்காக உருவாக்கப்பட்ட கணக்காய்வு அளவைக் கட்டளைகள் பின்வருமாறு.

i. அரசின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் இணைப்பு பணிக்கு பொறுப்பான நிறுவனமொன்று அரசினால் இனங்காணப்படுதல் அவசியமாக உள்ளமை.

ii. அரசினால் தாபிக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி சபை நிலைபேறான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயங்களை ஒழுங்கமைக்கும் தேவைப்பாடு காணப்படுகின்றமை.

iii. 2030 நிகழ்ச்சி நிரலினை நடைமுறைப்படுத்துவதல் தொடர்பில் நிறுவனத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பில் அரசினால் மீளாய்வொான்றினை மேற்கொள்ளல் அவசியமானது ஆகும்.

iv. பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்களின் பணிகள் மற்றும் பிரதான நோக்கங்கள் அரசினால் இனங்காணப்படுத்தல் வேண்டும்.

v. அரசின் தேசிய அபிவிருத்தி திட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைரீதியான திட்டங்களை மேம்படுத்தும் துறைகள் அரசினால் இனங்காணப்பட வேண்டியமை.

vi. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் மக்களை அறிவூட்ட வேண்டியமை.

vii. 2030 நிகழ்ச்சி நிரலினை நடைமுறைப்படுத்தும் நடைமுறையின் அனைத்து கட்டங்களினதும் பல்வேறுபட்ட சமூகத்தினரை ஈடுபடுத்தல்.

viii. அமுல்படுத்தப்பட்ட செயன்முறைக்குரியதாக அரச நிறுவனங்களின் பாத்திரங்கள் மற்றும் பொறுப்பினை பொறுப்பினை தெளிவாக இனங்காணல்.

ix. பல்வேறு மட்டங்களிடையே காணப்படும் இணைப்பு பொறிமுறை, மீளாய்வு மற்றும் மாற்றங்கள் தேவையான துறைகளை இனங்காணல்.

x. ஒவ்வொரு நிர்வாக மட்டங்களிடையே நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பொறுக்கினை ஒப்படைப்பதற்காக நிறுவன திட்டத்தினை தயாரித்தல்.

xi. நிலைபேறான அபிவிருத்தியின் மூன்று பகுதிகளையும் ஒன்றிணைப்பதற்காக அரச கொள்கைகளை உருவாக்குதல்.

xii. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வளங்கள் மற்றும் இயலுமைகளை இனங்காணல்.

xiii. வளங்கள் மற்றும் இயலுமைகளை இனங்காணும் போது அனைத்தையும் உள்ளடக்கிய நடைமுறையொன்ற காணப்படல்.

xiv. தேவையான வளங்கள் மற்றும் இயலுமைகளை பெற்றுக்கொள்ளும் போது பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்களுக்கிடையே ஒத்துழைப்பினை அபிவிருத்தி செய்தல் அவசியமானதாகும்.

xv. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்காக கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடுவதற்கு தேசிய ரீதியிலான குறிகாட்டிகள் மற்றும் தரவு அடிப்படைகளின் தேவைப்பாடு.

xvi. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்காக கண்காணிப்பு மற்றும் செயன்முன்னேற்றத்தினை அறிக்கையிடுவதற்கு மைல்கற்கள் காணப்பட வேண்டியமை (milestones).

xvii. தேவையான அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தரவு சேகரிப்பு கட்டமைப்பொன்றின் தேவைப்பாடு.

xviii. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் மற்றும் அறிக்கையிடும் கட்டமைப்பொன்றின் தேவைப்பாடு.

2.7 கணக்காய்வு அளவுக்கட்டளைகளின் மூலங்கள்

அளவுக்கட்டளைகளின் மூலங்கள் பின்வருமாறு ஆகும்.

i. நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் 2015 ஒக்தோபர் 07 ஆந் திகதிய இடைக்கால விரிவான வழிகாட்டி.

ii. அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நிறுவனத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் கணக்காய்வு தொடடர்பிலான அதியுயர் கணக்காய்வு நிறுவனத்தின் பணிப்பொறுப்பிற்கான நியமம் 5130.

iii. 2017-2020 அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்.

iv. உள்ளக பாராளுமன்ற சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட சுய மதிப்பீட்டு பொறித்தொகுதி (Self Assessment Tool Kit)

v. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட இலங்கையின் துரித ஒருங்கிணைந்த மதிப்பீட்டு அறிக்கை.

vi. தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் அரச முதலீட்டு திட்டங்களுடடன் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு, 2019 ஆம் ஆண்டின் புதிய செயற்திட்டங்களை மதிப்பாய்வு செய்யும் வழிகாட்டிக் கோவை.

vii. 2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் I மற்றும் II ஆம் பிரிவுகள்.

viii. மில்லேனியம் அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான இலங்கையின் அறிக்கை.

ix. தன்னார்வ தேசிய மீளாய்வு 2018.

x. தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் குறிகாட்டிகளிள் தரம் தொடர்பான அறிக்கை.

xi. 2025 தூரநோக்கு மற்றும் 2019 இன் சுபீட்சத்தின் நோக்கு.

xii. 2019 செப்தம்பர் 18 ஆந் திகதிய அமப/19/2488/101/159 ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானம்.

xiii. 2018 ஏப்ரல் 19 ஆந் திகதிய 18/0593/708/008 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம்.

xiv. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுடன் தொடர்புடைய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை.

1. 2017 யூலை 25 ஆந் திகதிய 2/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை.
2. 2018 யூலை 17 ஆந் திகதிய 2/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை.
3. 2018 யூலை 31 ஆந் திகதிய பீடீ/சீபீபி/4/1/2/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை.

xv. 2019 ஒக்தோபர் 3 ஆந் திகதிய பீஎஸ்/எஸ்பி/எஸ்பீ/டீ/22/2019 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சபையின் சுற்றறிக்கை.

xvi. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல் தொடர்பில் முதன்மையான பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்களின் செயலாற்றல் அறிக்கைகள்.

## 2.8 நடைமுறை

பல்வேறு வகையான தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக பயன்படுத்தக்கூடிய பல்வேறு முறைகள் பின்வருமாறு.

| | தரவு வகை | சான்று பெற்றுக்கொள்ளப்பட்ட முறை |
|---|---|---|
| i. | எழுத்துமூல தரவுகள் | உரிய ஆவணங்களை மீளாய்வு செய்தல், ஆவணங்களை பரீட்சித்தல். |
| ii. | துணைநிலை தரவுகள் | அரச உத்தியோகத்தர்கள், செறிவான சமூகம், இலக்கிடப்பட்ட குழுக்கள் ஆகியவற்றுடனான கலந்துரையாடல்கள். |
| iii. | பகுப்பாய்வு செய்யப்பட்ட தரவுகள் | இலங்கை மத்திய வங்கி, பாதீட்டு மதிப்பீடு, கணக்காய்வாரள்களினால் தயாரிக்கப்பட்ட பல்வேறு வகையான தரவுகள். |

## 2.9 கணக்காய்வு நியமங்களுடனான தொடர்பு

மிகவும் உயர்வான தரமுடைய கணக்காய்வு அறிக்கையொன்றினை வழங்குவதற்காக அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்கள் பயன்படுத்தப்பட்டன. அதாவது, ISSAI 300, ISSAI 3000, ISSAI 3100, ISSAI 3200 ஆகியன ஆகும்.

## 2.10 கணக்காய்வு விடயப்பரப்பு

2018 ஆகஸ்ட் முதல் 2019 திசெம்பர் வரையான காலப்பகுதியினுள் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் 2019 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு சாட்டப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி சபை மற்றும் அதனுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்த சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு மற்றும் அதனுடன் தற்போது தொடர்புபடுத்தப்பட்டுள்ள நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு நிதியினை திரட்டும் போது பங்களிப்பினை வழங்கும் தேசிய வரவு செலவு திட்ட திணைக்களம், நிலைபேறான

அபிவிருத்தியினை அளவீடு செய்வதற்காக குறிகாட்டிகளை தயாரித்துள்ள தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம்,நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் பணிக்கு தேசிய ரீதியில் பொறுப்பினை கொண்டுள்ள தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களினை நடைமுறைப்படுத்தல் பரீட்சிக்கப்பட்டது.

## 2.11 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பொதுமக்களின் பங்களிப்பு

தூரநோக்கு, நிலைபேறான அபிவிருத்தி சபை, பாராளுமன்றத்தினால் நியமிக்கப்பட்ட குழு, ஐக்கிய நாடுகள் அமைப்பினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்ப ஆகியவற்றை விபரிக்கும் அது நாட்டின் தேசிய மட்டம் மற்றும் உப தேசிய மட்டம் ஆகிய இரு பிரிவுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் விதமானது வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.


பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட குழு
ஐ.நா.ச
நிலைபேறான அபிவிருத்தி சபை
தூரநோக்கு
தனியார்கம்பனிகள், சிவில்சமுக
தேசிய மட்டம்
விசேட செலவின அலகுகள்
வரிசை அமைச்சு
திணைக்களங்கள் நியதிச்சட்ட சபைகள் அரச கூட்டுத்தாபனங்கள்
உப தேசிய மட்டம்
மாவட்ட செயலகங்கள்
மாகாண சபைகள்
உள்ளுராட்சி சபைகள்
பிரதேச செயலகங்கள்

## 3. விரிவான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பரிந்துரைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் கருத்துரைகள்

### 3.1 2030 நிகழ்ச்சி நிரலினை தேசிய சூழலுடன் இணைத்தல்

#### 3.1.1 நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான தேசிய கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை தயாரித்தல்

**(அ) மூலோபாயங்களை தயாரித்தல்**

2015 ஆம் ஆண்டளவில் இலங்கை நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அபிவிருத்தி நடைமுறையை நிலைபேறான அபிவிருத்தி நோக்கிய பாதையில் ஈடுபடுத்துவதற்காக தனித்துவமான சந்தர்ப்பமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி சபையானது அதன் அங்கத்தவர்கள் 2018 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் நியமிக்கப்பட்டிருந்தனர். நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் முதலாவது பகுதியின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி சபையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், நிலைபேறான அபிவிருத்தி சபையினால் தேசிய நிலைபேறான அபிவிருத்தி கொள்கை மற்றும் மூலோபாங்கள் தயாரிக்கும் அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சொன்று, திணைக்களமொன்று, மாகாண சபையொன்று, மாகாண திணைக்களமொன்று மற்றும் உள்ளூராட்சி நிறுவனமொன்றினால் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கைக்கு மற்றும் மூலோபாயங்களுக்கு அமைய தமது விடயப்பரப்பிற்கு உரியதாக தயாரிக்கப்பட வேண்டும்.

**(ஆ) மூலாபாயங்களை தயாரித்து நிலைபேறான அபிவிருத்தி சபைக்கு சமர்ப்பித்தல்**

2019 செப்தம்பர் 18 ஆந் திகதிய அமப/19/2488/101/159 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி கொள்கை மற்றும் மூலோபாங்கள் தயாரிக்கப்பட வேண்டிய விதம் தொடர்பில் தகவல் குறிப்பிடப்பட்டிருந்தது. அனைத்து அரச நிறுவனங்களாலும் இனங்காணப்பட்ட உபாயமார்க்கங்களின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை இனங்காணல் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயங்கள் அமைச்சரவை மற்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அது 2020-2030 காலப்பகுதிக்கான இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான

உயர் மட்டத்திலான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயங்களாக மாறியுள்ளது.

அந்த தேசிய கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களின் பிரகாரம் நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பணிகளை ஒழுங்குபடுத்த வேண்டும். அதன் போது நிலைபேறான அபிவிருத்தி சபைக்கு அதற்காக ஏதேனுமொரு திட்டவட்டமான விடயமொன்று தொடர்பிலான கற்கை தொடர்பில் நிபுணத்துவ குழுவொன்றினை நியமிப்பதற்காக கிடைத்துள்ள அதிகாரத்தின் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்தி தேசிய கொள்கைகளை உருவாக்கும் பணி சனநாயக நல்லாட்சி மற்றும் பொறுப்புகளை பலப்படுத்தும் செயற்திட்டத்திற்கு (SDGAP) வழங்கப்பட்டுள்ளது. இதற்காக கண்காணிப்பு குழுவொன்று மற்றும் மதியுரையாளர் ஒருவர்நிலைபேறான அபிவிருத்தி சபையினால் நியமிக்கப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம், நிலைபேறான அபிவிருத்தி தேசிய கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு அதன் முதல் வரைபு அறிக்கைநிலைபேறான அபிவிருத்தி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், நிலைபேறான அபிவிருத்தி தேசிய கொள்கை 2019 நவம்பர் மாதம் வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.2 நிலைபேறான அபிவிருத்தியுடன் தொடர்புடைய வழிகாட்டிக் கோவைகளை வெளியிடல்

#### (அ) தேசிய கொள்கைகள் மற்றும் மூலோபாயங்கள் இல்லாதிருப்பதன் தாக்கம்

அனைத்து அமைச்சுக்களும், திணைக்களமொன்றும், மாகாண சபையும், மாகாண அமைச்சு மற்றும் திணைக்களம், உள்ளூராட்சி நிறுவனமும் தமது விடயப்பரப்பிற்கு உரியதாக நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயங்களுக்கு இணங்க நிலைபேறான அபிவிருத்தி மூலோபாயங்களை தயாரிக்க வேண்டும் என்பது 2017 இன் 19 ஆம் இலக்க தேசிய நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கையொன்று மற்றும் மூலோபாயமொன்று இல்லாதிருந்தமையால் குறித்த நிறுவனங்கள் தமது தற்போதைய செயல்நடவடிக்கை திட்டத்தினூடாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் அடிப்படையில் அவர்களின் பணிகளை மேற்கொள்கின்றனர். அது தொடர்பில் இணைப்பு நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டு முதல் நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் நிலைபேறான அபிவிருத்தி பிரிவினால் ஆகும்.

**(ஆ) விடயப்பரப்பிற்கு பொருத்தமான கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை உருவாக்குதல்**

(i) 2018 ஏப்ரல் 19 ஆந் திகதிய 18/0593/708/008 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், அரச நிறுவனங்கள் தமது விடயப்பரப்பிற்கமைய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுடன் பொருந்தும் வகையில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுடன் பொருந்தும் வகையில் தமது கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை தயாரிப்பதற்காக சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் இருவர் பெயரிடப்பட வேண்டும் என்பது நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் மற்றும் அமைச்சின் 2018 ஏப்ரல் 27 ஆந் திகதிய எம்எஸ்டீடபிள்யு/08/65 ஆம் இலக்க கடிதத்தின் பிகராரம் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ii) 2019 ஒக்தோபர் மாதம் 03 ஆம் திகதிய பீஎஸ்/எஸ்பீ/எஸ்பி/சீ/22/2019 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சபையின் தலைவரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தேசிய கொள்கைக்கு மற்றும் மூலோபாயங்களுக்கமைய செயற்படல் அனைத்து அமைச்சினதும், திணைக்களத்தினதும், மாகாண சபையினதும், மாகாண அமைச்சினதும், மாகாண திணைக்களத்தினதும் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத்தினதும் பொறுப்பாவதுடன், தமது விடயப்பரப்பிற்கு உரியதாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உள்ளடக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி மூலோபாயங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.அதற்காக 2019 ஆகஸ்ட் மற்றும் செப்தம்பர் மாதங்களில் அனைத்து அரச நிறுவனங்களினதும் இரு உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தன. எனினும், 2019 நவம்பர் மாதம் வரையிலும் எந்தவொரு அரச நிறுவனத்தினாலும் தமது விடயப்பரப்பின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி மூலோபாயங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றை நிலைபேறான அபிவிருத்தி சபைக்கு முன்வைத்திருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி சபையின் பணிகளை நிறைவேற்றுதல்**

நிலைபேறான அபிவிருத்தி சபையின் பின்வரும் பணிகள் 2019 மாதம் வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது நிலைபேறான அபிவிருத்தி சபையினால் வழங்கப்பட்டிருந்த செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

i. நிலைபேறான அபிவிருத்தி நியமங்கள் மற்றும் சூழல் தடங்களை அடையாளம் காண்பித்தல்.

ii. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியும், புதிய கண்டுபிடிப்புகளும், கற்கைகளும், அறிவூட்டலும், வறுமை ஒழிப்பு உள்ளடங்களாக நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்தல்.

iii. நிலைபேறான அபிவிருத்தியுடன் தொடர்புடைய பொறிமுழற, கணக்காய்வுப் பொறிமுறை மற்றும் ஏனைய அனைத்து விடயங்களையும் இனங்கண்டு பின் அவற்றை பின்பற்றுதல்.

### 3.1.3 நிலேபேறான அபிவிருத்தி நோக்கங்களின் தேசிய திட்டம் மற்றும் கொள்கைகளுடன் ஒருங்கிணைத்தல்

#### (அ) எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி இலக்குகள்

i. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கான தூரநோக்கத்திற்கு 2019 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் வரையிலும் ஈடுபடுத்தப்பட்டது 2025 தூரநோக்கு ஆகும். அதன் பிரகாரம், 2025 ஆம் ஆண்டளவில் இலங்கை அறிவினை அடிப்படையாக கொண்ட உயர் போட்டித்தன்மையுடைய சமூக சந்தைப்படுத்தல் பொருளாதாரம் எனும் பரிணாமத்தினை நோக்கி நகர்ந்து இந்து சமுத்திரத்தின் செல்வந்த நாடொன்றாக மாறக்கூடும். 2025 நோக்கின் அடிப்படையில் ஆண்டொன்றிற்கான தனிநபர் வருமானம் ஐ.அ.டொலர் 5,000 வரை அதிகரிப்பதற்கும், பத்து இலட்சம் தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், நேரடி வெளிநாட்டு முதலீட்டினை ஆண்டொன்றிற்கு ஐ.அ.டொலர் 5 பில்லியன் வரை அதிகரிப்பதற்கும், ஆண்டிற்கான ஏற்றுமதி பெறுமதியினை இரு மடங்காக மாற்றி ஐ.அ.டொலர் 20 பில்லியன் வரை அதிகரிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| | இலக்கு | 2017 | 2018 | இலக்கு 2025 |
|---|---|---|---|---|
| | --------- | ------ | -------- | -------------- |
| i. | ஆண்டொன்றிற்கான தனிநபர் வருமானம் ஐ.அ.டொலர் 5,000 வரை அதிகரித்தல் | ஐ.அ.டொலர் 3,396 | ஐ.அ.டொலர் 3,991 | ஐ.அ.டொலர் 5,000 |
| ii. | பத்து இலட்சம் தொழில்வாய்ப்புகளை உருவாக்குதல். | தரவுகள் இல்லை | தரவுகள் இல்லை | 1,000,000 |
| iii. | ஏற்றுமதி பெறுமதியினை இரு மடங்காக மாற்றி ஐ.அ.டொலர் 20 பில்லியன் வரை அதிகரித்தல். | ஏற்றுமதி ஈட்டம் ஐ.அ.டொலர் 11,360 (11 பில்லியன்) | ஏற்றுமதி ஈட்டம் ஐ.அ.டொலர் 11,889 (11 பில்லியன்) | ஏற்றுமதி ஈட்டம் ஐ.அ.டொலர் 20 பில்லியன் |
| iv. | நேரடி வெளிநாட்டு முதலீட்டினை ஆண்டொன்றிற்கு ஐ.அ.டொலர் 5 பில்லியன் வரை அதிகரித்தல் | நேரடி வெளிநாட்டு முதலீடு ஐ.அ.டொலர் 1,910 (1.9 பில்லியன்) | நேரடி வெளிநாட்டு முதலீடு ஐ.அ.டொலர் 2,136 (2.1 பில்லியன்) | நேரடி வெளிநாட்டு முதலீடு ஐ.அ.டொலர் 5 பில்லியன் |

மூலம் - இலங்கை மத்திய வங்கி அறிக்கை

ii. மேற்படி தரவுகளின் பிரகாரம், மேற்படி இலக்குகளில் ஆண்டொன்றிற்கான தனிநபர் வருமானத்தினை ஐ.அ.டொலர் 5,000 எனும் இலக்கனை அடையும் எதிர்பார்ப்பு காணப்படக்கூடிய போதிலும், ஏற்றுமதி வருமானத்தினை இரு மடங்காக மாற்றுவதற்கு அல்லது நேரடி வெளிநாட்டு முதலீடுகளை அதிகரித்தல் சிரமத்திற்குள்ளாகியுள்ளமை அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த 2025 தூரநோக்கானது சூழல் பற்றிய அம்சங்களை விட சமூக மற்றும் பொருளாதார அம்சங்களுடன் ஒருங்கிணைந்துள்ளமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. 2019 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட சுபீட்சமான தூரநோக்கினுள்ளும் நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 ஆம் ஆண்டின் போது பயணிப்பதற்காக தேசிய திட்டமொன்றினை தயாரித்தல் மற்றும் அதன் பிரகாரம் அமைச்சரவையின் அமைச்சுக்களை மீள ஒழுங்கமைப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

### 3.1.4 பாராளுமன்றத்தின் பணிகள்

**(அ) கொள்கை மற்றும் சட்டங்களின் உருவாக்கம் மற்றும் தேவையான பரிந்துரைகளை வழங்குதல்**

பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட குழுவிற்கு பின்வரும் விடயங்கள் தொடர்பில் பரிந்துரை வழங்குவதற்கும், உரிய வரிசை அமைச்சுகளை வினவி தேசிய கொள்கைகள் மற்றும் சட்டங்களை உருவாக்குவதற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. போதியளவிலான தேசிய வளங்களை ஒதுக்கீடு செய்தல் மற்றும் சர்வதேச நிதி மூலங்களை இனங்காணல், அரசின் செயற்படுத் முகவர் நிறுவனங்களுக்கிடையேயான இணைப்பு,தேசிய, மாகாண மற்றும் பிராந்திய மட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை வலையமைப்பொன்றாக நடைமுறைப்படுத்தும் செயன்முன்னேற்றத்தினை அளப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்,அரச மற்றும் தனியார் பங்குடமையை பலப்படுத்தல், ஐக்கிய நாடுகளின் அங்கத்துவம் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் உதவியினை பெற்றுக்கொள்ளல், நிபுணத்துவ அறிவு மற்றும் அனுபவம் ஆகியவற்றை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பகிர்ந்துகொள்ளல், தனியானதொரு தரவுக் கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் மற்றும் கால ரீதியில் செயன்முன்னேற்ற மீளாய்வினை மேற்கொள்ளல் மற்றும் அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்துதல் எனும் தொடர்புடைய பணிகளை உள்ளடக்கும்.

**(ஆ) பணிப்பொறுப்பினை நிறைவேற்றுவதிலான செயன்முன்னேற்றம்**

பொறுப்புக்கள் மற்றும் பணிப்பொறுப்பினை நிறைவேற்றுவதின் கீழ் மீளாய்வு மற்றும் கண்காணிப்பு, மதியுரை சேவைகளை வழங்குதல், சட்ட உருவாக்கம், இணைப்பு மற்றும் அறிவூட்டல் மற்றும் அறிக்கைகளை தயாரித்தல் எனும் பொறுப்புகள் இனங்காணப்பட்டிருந்ததுடன், அந்த பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற செயற்குழு 2018 நவம்பர் 20 ஆந் திகதி முதல் செயற்படாமையால் 5 பொறுப்புகளின் கீழான பணிகளில் 4 பணிகளின் செய்னமுன்னேற்றதினை அளவிட முடியாதிருந்தது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை பிராந்தியமயப்படுத்தல்**

பொதுவான நோக்கொன்றிற்காக தேசிய கொள்கைகளை மத்தியப்படுத்தல் மற்றும் தொடர்புபடுத்தப்படல் வேண்டும். நாடாளுமன்றங்களுக்கிடையேயான ஒன்றியம் (IPU) மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (UNDP) மூலம் தயாரிக்கப்பட்ட சுய மதிப்பீட்டு பொறித் தொகுதி மூலம்

உபாய மார்க்கங்கள், பொறிமுறை மற்றும் பங்குடமை இனங்காணப்பட்டுள்ளது.

i. பாராளுமன்ற விசேட செயற்குழுவின் மூலம் தேசிய அபிவிருத்தி திட்டத்திற்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை பிராந்தியமயப்படுத்துவதற்காக பிராந்திய மட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட பொருத்தமான குறிகாட்டிகளுக்கு உதவி வழங்க வேண்டியதுடன், பிரசைகளை இந்த நடைமுறைக்கு பழக்கப்படுத்த வேண்டும்.

ii. சுய மதிப்பீட்டு தொகுதியின் பிரகாரம் விசேட பிராந்திய தேவைப்பாடுகளை இனங்காணல் பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

iii. மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை பிராந்தியமயப்படுத்துவதற்கான உயரிய சபையொன்று பாராளுமன்றத்தினால் தாபிக்கப்பட வேண்டும்.

iv. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளும் செயன்முன்னேற்றத்தினை சுய மதிப்பீட்டு பொறித் தொகுதியின் மூலம் அளவீடு செய்து தேசிய மற்றும் பிரதேச தேவைகள் மற்றும் கவனம் செலுத்தப்பட வேண்டிய விசேட குழுக்களின் நிலைமைகள் வெளிப்படுத்தப்படும் வகையில் பொறுப்புடன் செயற்படல் அந்த நாட்டின் பாராளுமன்றத்திற்க சாட்டப்படுகின்றது.

**(ஈ) பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள பதில்களின் பிரகாரம் செயன்முன்னேற்றம்**

இந்த நுழைவிற்காக மக்களின் கவனத்தினை ஈர்ப்பதன் பொருட்டு பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மேற்படி சுய மதிப்பீட்டு பொறித் தொகுதியின் மூலம் வழங்கப்பட்டுள்ள வினாக்களுக்காக பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள பதில்களின் பிரகாரம் பாராளுமன்றத்தினால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அறிக்கையிடப்பட்டிருந்தது.

i. அரச நிறுவனங்களின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக குறிகாட்டிகள் மற்றும் அடிப்படை தரவுகளை ஒழுங்கமைப்பதற்காக கண்காணிப்பு நடைமுறையொன்று இல்லாதிருந்தமை.

ii. தேசிய பாதீட்டினுள் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக போதியளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதை பரீட்சிக்கும் நடைமுறையொன்று இல்லாதிருந்தமை.

iii. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தனியார் மற்றும் அரச துறையினரின் பங்களிப்பினை அறிக்கையிடல் மற்றும் மதிப்பீடு செய்யும் நடைமுறையொன்று இல்லாதிருந்தமை.

iv. 2018 நவம்பர் 20 ஆந் திகதி முதல் பாராளுமன்றத்தின் விசேட செயற்குழு செயற்படாமையால் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்கள் பாராளுமன்றத்திடம் இல்லாதிருந்தமை.

### 3.1.5 துரித ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பீடு

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் தேசிய அபிவிருத்தி திட்டத்தினை நிரப்படுத்தும் நிலை தொடர்பில் இனங்காணும் பொருட்டு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் கருத்திற்கொள்ளப்பட்டு ‘‘துரித ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பீடு’’ எனும் பெயரிலான (Rapid Integrated Assessment) மதிப்பீடு நடாத்தப்பட்டது. அந்த மதிப்பீட்டு பெறுபேறுகளின் பிரகாரம், கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது 169 இலக்குகளில் நாட்டின் சூழலுக்கு பொருந்தாத 16 இலக்குகள், அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் சமனான இலக்குகள் இல்லாதிருந்தமை காரணத்தால் ஒப்பிட முடியாத 44 இலக்குகள், 64 இலக்குகள் முழுமையாகவும் 45 இலக்குகள் பகுதியளவிலும் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் நிரப்படுத்தப்பட்டிருந்தமை ஆகும். பகுதியளவில் நிரப்படுத்த காரணமாக அமைந்தது விடயப்பரப்பு, அபிலாசைகள் அல்லது நிறைவேற்றப்பட்டதனை அளவீடு செய்யும் குறிகாட்டிகள் இல்லாதிருந்தமை ஆகும்.

### 3.1.6 அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுடன் இணைத்தல்

(அ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுடன் தேசிய கொள்கையினை நிரப்படுத்தல் தொடர்பில் அறிவினை பெற்றுக்கொள்வதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களம் (2017-2020) அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை அடிப்படை ஆவணமாக பயன்படுத்தி பகுப்பாய்வொன்றினை மேற்கொண்டுள்ளது. இந்த பகுப்பாய்வின் போது, நாட்டின் நிலைபேறான நோக்கம் தொடர்பான அம்சங்கள் தொடர்பில் பரந்த அளவிலான பகுப்பாய்வென்றினை பெற்றுக்கொள்வதற்கு நிலைபேறான அபிவிருத்தி

நோக்கங்களுக்க எதிராக அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதானமான துறைகள் விபரிக்கப்பட்டன.

(ஆ) அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் பல்வேறு வகையான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை உள்ளடக்குவதற்கு, இலக்கு மட்டத்தில் மேலும் அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலான பகுப்பாய்விற்கு, நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளுடன் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னுரிமை துறைகளை நிரட்படுத்துவதற்கு மேற்குறிப்பிடப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை விவரித்தல் பயன்படுத்தப்பட முடியும்.

**அரச முதலீட்டு திட்டத்தின் பிரதான பகுதிகளை நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுடன் ஒப்பிடல்.**

| நோக்கங்கள் | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் | சீராக்கம் % |
|---|---|---|
| 01. | வறுமை ஒழித்தல் | 86 |
| 02. | பட்டினி ஒழிப்பு | 63 |
| 03. | ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு | 69 |
| 04. | தரமான கல்வி | 100 |
| 05. | பால் சமத்துவம் | 67 |
| 06. | சுத்தமான நீரி மற்றும் சுத்திகரிப்பு சேவைகள் | 88 |
| 07. | சுமக்கக்கூடிய விலையில் சுத்தமான வலுச்சக்தி | 100 |
| 08. | சிறந்த பணிகள் மற்றும் ஆக்கபூர்வமான தொழில்கள் | 83 |
| 09. | கைத்தொழில் நவீனமயப்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் | 100 |
| 10. | ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் | 60 |
| 11. | நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் | 90 |
| 12. | நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி | 64 |
| 13. | வானிலை நடவடிக்கைகள் | 80 |
| 14. | தண்ணீரை அடிப்படையா கொண்ட வாழ்க்கை | 30 |
| 15. | நிலத்தினை அடிப்படையா கொண்ட வாழ்க்கை | 33 |
| 16. | சமாதானம், சமத்துவம் மற்றும் வலுவான நிறுவனங்கள் | 42 |
| 17. | குறிக்கோள்களை அடைவதில் பங்கேற்பு | 26 |

(இ) குறித்த நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதன் பிரகாரம் நோக்கம் 14, 15, 16, 17 ஆகியவற்றின் பொருத்தப்பாடு குறைவாக காணப்பட்டமையின் காரணமாக முதலீட்டு திட்டம் சூழல் அம்சங்களை விட பொருளாதார மற்றும் சமூக அம்சங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**3.1.7 பாதீடுகள், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கமைய சீரமைத்தல்**

நாட்டின் சூழலின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் நடைமுறையின் போது பாதீடுகள், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை சீரமைத்தல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடுகள், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக சீரமைக்கப்படவில்லை. எனினும், 2018 ஆம் ஆண்டிற்காக பாதீட்டில் செயற்திட்டங்களின் செயலாற்றலினை அடிப்படையாக கொண்டு நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளும் நோக்கில் முன்னோக்கி செல்ல நேர்ந்துள்ளது. அதன் பிரகாரம், பிரதான செய்திட்டங்களின் அளவிடக்கூடிய செயலாற்றல் குறிகாட்டிகளை இனங்காணல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## 3.2 பாதீட்டு முன்மொழிவுகளினூடாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தல்

### 3.2.1 வறுமையை ஒழித்தல் - நோக்கம் 1

**(அ) 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடுகளை தயாரிப்பதுடன் தொடர்புடைய ஏற்பாடுகள்**

2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டினை தயாரிப்பதற்காக வழிகாட்டிகள் மற்றும் ஆலோசனைகளுக்காக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2017 யூலை 25 ஆந் திகதிய 2/2017 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையில் பாதீட்டினை தயாரிப்பதற்கான பரந்த நோக்கம் உள்ளடக்கப்பட வேண்டிய தேவைப்பாடாவது 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு அதனை நோக்கி பயணிப்பது ஆகும். மேற்படி சுற்றறிக்கையின் 06 ஆம் இலக்கத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டின் போது குறைவான அபிவிருத்தியுடைய மாவட்டங்களில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்களாக வறுமையை ஒழிப்பததற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போது

நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களினூடாக ஒவ்வொரு வரிசை அமைச்சினதும் செயலாளரினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

**(ஆ) 2018 ஆம் ஆண்டின் செயன்முன்னேற்றம்**

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் வறுமையை ஒழித்து நிலைபேறான அபிவிருத்தி பாதையில் உலகினை பயணிக்க வைக்கும் நோக்கில் இலங்கை அரசிற்காக வரசு செலவுத் திட்ட திணைக்களம் மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீட்டு முன்மொழிவுகளை கோரியுள்ளது. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடுகளை தயாரிக்கும் போது 52 அமைச்சுக்களில் 04 அமைச்சுக்கள் மாத்திரம் வறுமை ஒழிப்பிற்காக ரூபா 47,330 மில்லியன் செலவிடப்பட்டு இயற்கை அனர்த்தங்களை குறைத்தல், வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல், பிரதேச அபிவிருத்தியை இலக்காக கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் செயலாற்றல் குறிகாட்டிகளுடன் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

**(இ) 2019 ஆம் அண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டினை தயாரிப்பதனுடன் தொடர்புடைய நிதியேற்பாடுகள்**

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் 2018 யூலை 17 ஆந் திகதிய 4/2018 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம், வறுமை ஒழிப்பதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. அதனால், 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டினுள் அமைச்சுகளின் செயற்திட்டங்களினூடாக இனங்காணப்பட்ட துறைகளுக்கு போதியளவிலான வளங்கள் பங்கீடு செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட ஒதுக்கீடுகளினூடாக வறுமை ஒழிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தின் அளவு ரூபா 127,020 மில்லியன் மற்றும் 06 நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகும். அதன் பிரகாரம் 37 அமைச்சுகளில் 06 அமைச்சுகளில் மாத்திரம் வறுமை ஒழிப்பதற்காக ரூபா 127,020 மில்லியன் செலவிடப்பட்டு கடன் வழங்குதல் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், விவசாயத்தினை மேம்படுத்தல், சமூர்த்தி நிகழ்ச்சித்திட்டம், காணிகள் முகாமைத்துவம் ஆகிய இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் செயலாற்றல் குறிகாட்டிகளுடன் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான பாதீட்டு நிதி ஒதுக்கீடுகளில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் முறையே ரூபா 47,330 மில்லியன் மற்றும் ரூபா 127,020 மில்லியனாக காணப்பட்டதுடன், மொத்த வரவு செலவு திட்ட நிதியேற்பாட்டின் சதவீதமாக 1 சதவீதம்

மற்றும் 4 சதவீதம் ஆக காணப்பட்டது விபரங்கள் பின்னிணைப்பு 01 இல் காணப்படுகின்றன.

### 3.2.2 பாலின சமத்துவம் - நோக்கம் 05

#### (அ) 2018 ஆம் ஆண்டின் பாதீட்டு ஒதுக்கம்

தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்தின் 2017 யூலை 31 ஆந் திகதிய BD/CBP/4/1/2-2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டினை தயாரிப்பதற்காக வழிகாட்டல்களை வழங்கும் சுற்றறிக்கைகளின் பிரகாரம், அனைத்து அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் தலைவர்களால் இலங்கையின் அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நோக்கி பயணிக்கும் பொருட்டு குறித்த இலக்குகளை உள்நாட்டு தேவைப்பாடுகளுக்கு பொருந்தும் வகையில் ஒழுங்கமைக்க வேண்டும். அதற்கு தேவையான நிதி மற்றும் பௌதீக வளங்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு செயற்திட்டங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

#### (ஆ) பிரதான பாதீட்டு தாரையில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிகள்

மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் பிரதான பாதீட்டு தாரையில் சேர்க்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக மகளிர் மற்றும் பெண் பிள்ளைகளின் உரிமைகளை பாதுகாப்பதற்காக 5 நோக்கங்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சனத்தொகையின் அரைவாசிக்கும் மேலானோர் பெண்கள் ஆவர். அதன் பிரகாரம், பெண்கள் மற்றும் மகளிர் விவகார அமைச்சினால் செயலாற்றல் குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த குறிகாட்டிகளின் பிரகாரம் குறித்த நிறுவனங்களால் பாதீட்டு முன்மொழிவுகளுடன் தொடர்புடைய செயலாற்றல் குறிகாட்டிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2018 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் பரிசோதனையின் போது தமது மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களுக்காக உரிய நோக்கங்கள் மற்றும் அதற்குரிய இலக்குகள் 52 அமைச்சுகளில் 04 அமைச்சுகளில் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக இலக்குகளை இனங்காணல், செயலாற்றல் குறிகாட்டிகளை இனங்காணல், நிலைபேறான அபிவிருத்தியின் பிரதான நோக்கங்களுக்கான தொடர்பு தயாரிக்கப்பட்டு இனங்காணப்பட்டிருந்தது. இந்த 04 அமைச்சுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்காக ரூபா 7,421 மில்லியன்

ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அது மொத்த வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டின் 0.2 சதவீதம் ஆகும்.

**(இ) 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஒதுக்கீடு**

2019 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீடுகளில் 5 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் கீழ் பாலின சமத்துவத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்வதற்காக சுற்றறிக்கை வெளியிடப்பட்டிராததுடன், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சு மாத்திரம் ரூபா 214 மில்லியன் செலவிடப்பட்டு பெண்கள் மற்றும் மகளிரின் அபிவிருத்திக்காக நிகழ்ச்சித்திட்டங்கள் இலக்கிடப்பட்டிருந்தன. அது மொத்த பாதீட்டு ஒதுக்கீட்டில் 0.006 சதவீதம் ஆகும்.

### 3.2.3 அனைவரையும் உள்ளடக்கும் எண்ணக்கரு (17 நோக்கங்களுக்கும் உரியதாக)

இந்த நோக்கங்களை உறுதிப்படுத்தி இலங்கை பிரசைகளின் சமத்துவத்தினை பாதுகாப்பதற்காக பின்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

i. இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 03 ஆம் உறுப்புரையின் பிரகாரம், அனைத்து இலங்கையருக்கும் தமது விருப்பின் அடிப்படையிலான மதமொன்றினை பின்பற்றும் சுதந்திரமும், நம்பிக்கை கொள்ளல் அல்லது ஏற்றுக்கொள்ளும் சுதந்திரமும், எண்ணச் சுதந்திரம், சமமாக நடாத்தப்படுவதற்கான சுதந்திரம், எந்தவொரு நபரும் சித்திரவதைகளுக்கு அல்லது கொடூரமான மனிதத்தன்மையற்ற அல்லது இழிவான முறையில் நடாத்தப்படுவதற்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படாமை. பேசும் சுதந்தரைம், கூட்டம் கூட்டும் மற்றும் தொழிலொன்றினை மேற்கொள்ளும் சுதந்திரம் ஆகியவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ii. 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தகவல் அறியும் சமனான உரிமை.

iii. இலங்கையின் இலவசக் கல்வி மற்றும் சுகாதார நிதியேற்பாடுகளின் கீழ் கல்வி மற்றும் சுகாதார வசதிகனை சமனாக பெற்றுக்கொள்வதற்கான உரிமை.

iv. ஏனைய சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

v. இலங்கையின் மனிதவள அபிவிருத்தி சுட்டி கடந்த வருடங்களை விட உயர்வான பெறுமானத்தினை கொண்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| **ஆண்டு** | **நாடுகள்** | **சுட்டியின் பெறுமானம்** |
|---|---|---|
| 2016 | 188 | 73 |
| 2017 | 188 | 73 |
| 2018 | 189 | 76 |

மூலம்: இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை

**(அ) தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் பல்வேறு திறமைகளுடனான நபர்களை ஊக்குவித்தல்**

தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் 2017 யூலை 31 ஆந் திகதிய பீடீ/சீபீபி/04/01/02/2018 ஆம் இலக்கத்தின் கீழ் 2018 இன் பாதீட்டு மதிப்பீடுகளை தயாரிப்பதற்காக வழங்கப்படும் வழிகாட்டல்களின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இலக்குகள் உள்நாட்டின் தேவைகளுக்கு பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் போது ஆமற்படி விடயங்களை முக்கியமான பாதீட்டு நிரல்களில் சேர்க்கும் போது பல்வேறு திறமைகளை உடைய நபர்கள் தொடர்பான தேசிய கொள்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 7 முக்கியமான விடயங்களின் கீழ் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அவை அவர்களை ஊக்கமுடையவர்களாக மாற்றுவதற்காக சுகாதாரம் மற்றும் புனரமைப்பு, கல்வி, வேலைவாய்ப்பு, தொழிலுக்கான சுழலொன்றினை ஏற்படுத்தல், தரவு மற்றும் ஆராய்ச்சி, சமூக நிறுவனங்களை உருவாக்குதல் என்பவை ஆகும். அரச கொள்கையின் பிரகாரம் மற்றும் செயல்நடவவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அரசின் நிதியை செலவிடும் நிறுவனங்களால் பிரதானமாக கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில், குறித்த நிறுவனங்களை கண்டறிந்து நிதி வளங்களை அந்த நிறுவனங்களை நோக்கி ஈடுபடுத்தி அவர்களுக்கு சமூகத்தில் சமனான சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். அதன் போது 52 அமைச்சுகளின் 03 அமைச்சுக்கள் மாத்திரம் அது தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தன. அந்த செயற்திட்டத்திற்காக ரூபா 3,550 மில்லியனுக்கான மதிப்பீடுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

### (ஆ) அமைச்சு மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய செயற்திட்டங்கள்

2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடுகளை தயாரிப்பதற்காக மேற்படி பல்வேறு திறமைகளையுடைய நபர்களை ஊக்குவித்தல் தொடர்பில் சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டின் போது 10 ஆம் நோக்கத்தின் இலக்கு 2 இன் பிரகாரம் 2030 ஆம் ஆண்டளவில் வயது, பால், ஊனமுற்ற நிலைமை, சனத்தொகை வளர்ச்சி, இனம், மதம் அல்லது பொருளாதாரம் அல்லது ஏனைய நிலைமைகள் தொடர்பில் பாகுபாடின்றி அனைவரினதும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் உள்ளடக்கங்களை வலுவூட்டல் மற்றும் மேம்படுத்துவதற்காக 37 அமைச்சுகளில் ஒரு அமைச்சு மாத்திரம் செயற்திட்டமொன்றினை முன்மொழிந்திருந்தது.

### (இ) அனைவரையும் உள்ளடக்கும் எண்ணக்கருவினை நடைமுறைப்படுத்தல்

2030 நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும், எந்த ஒரு நபரையும் இடைநடுவில் கைவிட்டுச் செல்லாத வகையில் சட்டங்கள், விதிகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிப்பதற்கு மற்றும் செயற்படுத்துவதற்கு மற்றும் அந்த நிகழ்ச்சித்திட்டங்களின் செயன்முன்னேற்றத்தினை அளத்தல் மூலம் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி பயணிப்பதற்கான இலக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த இலக்குகளை பூர்த்தி செய்யும் போது அனைத்து சுட்டிகளும் அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட வேண்டும். 169 இலக்குகளுக்காக தயாரிக்கப்பட்டுள்ள 244 சுட்டிகளுக்கு உரியதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்ட சுட்டிகளின் பரீட்சிப்பின் போது மேற்படி நிகழ்ச்சி நிரல் பிரகாரம் அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தயாரிக்கக்கூடிய 13 இலக்குகளில் (1.2, 2.2, 2.3, 4.5, 4.4, 4.6, 4.9, 6.2, 8.5, 11.2, 11.7, 13.b, 17.18) அடிப்படை தரவுகள் தயாரிக்கப்பட்டுள்ளது (1.2, 2.2, 4.4, 4.a, 8.5) ஆகிய இலக்குகளுக்கு மாத்திரமே என்பது அவதானிக்கப்பட்டது.

### (ஈ) விசேட தேவையுடைய நபர்கள்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் 2001 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் விசேட தேவைப்பாடுடைய நபர்கள் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் பின்வருமாறு ஆகும். அந்த கணக்கெடுப்பில் 25 மாவட்டங்களில் 18 மாவட்டங்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளன. அதாவது 72 சதவீதம் ஆகும். அந்த 18 மாவட்டங்களை அடிப்படையாக கொண்டு பல்வேறு

அங்கவீன நிலைமைகளின் பிரகாரம் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சதவீதம் பின்வருமாறு ஆகும்.

**வீதாசார அடிப்படையில் விசேட தேவையுடைய நபர்களின் ஊனமுற்ற நிலைமை - 2001**




மேலும், மேற்படி வீதாசாரங்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட விசேட தேவையுடைய நபர்களின் கல்வி நிலைமைகளை பகுப்பாய்வு செய்யும் போது பாடசாலைக்கு செல்லாமை, ஆண்டு 6-8 சித்தியடைதல், பட்டங்களை பெற்றுக்கொள்ளல் முறையே 87,107, 47,398 மற்றும் 783 ஆக காணப்பட்டது. அது பின்வரும் வரைபடத்தில் காண்பிக்கப்படுகின்றது.

**விசேட தேவையுடைய நபர்களின் கல்வி நிலைமை (25 மாவட்டங்களின் 18 மாவட்டங்களின் நிலைமை)**



**(உ) விசேட தேவைப்பாடுடைய நபர்கள் தமது சீவனோபாயத்தினை ஏற்படுத்திக்கொள்ளல்**

இதன் போது அதிகளவு எண்ணிக்கையிலான நபர்கள் அதாவது 25 சதவீதமானோர் தமது பாதங்களில் குறைபாடுகளை கொண்டிருந்ததுடன், அவர்களின் கல்வியறிவு தொடர்பில் பரீட்சித்த போது பெரும்பாலானோர் அதாவது 32 சதவீதமானோர் பாடசாலைகளுக்கு செல்வதில்லை எனவும், அவர்களுள் பெரும்பாலானோரின் வாழ்க்கை அதாவது சுமார் 73 சதவீதமானோர் அவர்களின் உறவினர்களினால் பராமரிக்கப்படுகின்றனர். அதன் மூலம் அந்த நபர்கள் சமூகத்தினுள் பெரும் நிர்க்கதிக்குள்ளான நிலைக்கு உள்ளாகியுள்ளனர். அந்த நபர்களுக்காக சமூக பாதுகாப்பு முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| ஆண்/ பெண் | மொத்தம் | தொழில் புரிகின்றமை | உறவினர்களில் தங்கியிருத்தல் | அரசின் அல்லது மற்றுமொரு அமைப்பில் தங்கியிருத்தல் | பிச்சை எடுத்தல் | ஏனையவை | விபரங்களை பெற முடியாத |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | 274,702 | 39,512 | 201,264 | 16,969 | 1,025 | 15,856 | 76 |
| % | 100 | 14.4 | 73.3 | 6.2 | 0.4 | 5.8 | 0.0 |
| ஆண் | 158,446 | 33,594 | 104,606 | 9,285 | 758 | 10,152 | 51 |
| % | 100 | 21.2 | 66.0 | 5.9 | 0.5 | 6.4 | 0.0 |
| பெண் | 116,265 | 5,919 | 96,666 | 7,684 | 267 | 5,704 | 25 |
| % | 100 | 5.1 | 83.1 | 6.6 | 0.2 | 4.9 | 0.0 |

மூலம் - தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் 2001 இன் கணக்கெடுப்பு

## 3.2.4 2018 இன் பாதீட்டு மதிப்பீடுகளில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்குரிய இலக்குகள் உள்ளடக்கப்பட்டிராமை

**(அ) 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடுகளின் இலக்குகளை உள்ளடக்குதல்**

2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு முன்மொழிவின் ஊடாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தலின் கீழ் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2017 யூலை 25 ஆந் திகதிய 2/2017 ஆம் இலக்க

தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் கீழ் பாதீட்டினை தயாரிப்பதற்கான விரிவான நோக்கினுள் உள்ளடக்கப்படுவது 2030 ஆம் ஆண்டளவில்நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு பயணித்தல் ஆகும். அதன் போது வரிசை அமைச்சினால் பிரதானமான செயற்திட்டங்களினூடாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்குரிய முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2018 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டினை பரீட்சித்த போது 52 அமைச்சுக்களால் தமது பிரதான செயற்திட்டங்கள் மூலம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக இலக்குகளை நிர்ணயிக்கும் போது பாதீட்டு மதிப்பீடுகளில் கருத்திற்கொள்ளப்படாத நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் எண்ணிக்கை 88 ஆகும். அதாவது மொத்த 169 இலக்குகளின் 52 சதவீதம் ஆகும். மேற்படி 88 இலக்குகளும் எந்தவொரு அமைச்சினதும் பாதீட்டு மதிப்பீடுகளினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பட்டோலை 2 இல் காண்பிக்கப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டிற்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கான இலக்குகளை கண்டறியாத அமைச்சுகளின் எண்ணிக்கை 12 ஆகும். விபரங்கள் பின்வருமாறு.

i. புத்தசாசன அமைச்சு
ii. பாதுகாப்பு அமைச்சு
iii. தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு
iv. நீதிமன்ற அமைச்சு
v. வெளிநாட்டு விவகார அமைச்சு
vi. மின்வலு மற்றும் மீள் புத்தாக்க சக்தி அமைச்சு
vii. அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
viii. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீளக்குடியமர்த்துதல் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு
ix. பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு
x. அரச தொழில் முயற்சி அமைச்சு
xi. வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
xii. அபிவிருத்திக் கொள்கைத் திட்டமிடல் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு

**(ஆ) 2019 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் இலக்குகளை உள்ளடக்குதல்**

i. நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் 2018 யூலை 17 ஆந் திகதிய 4/2018 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் வரிசை அமைச்சினால் பிரதான செயற்திட்டங்களினூடாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கான முன்மொழிவுகளில் 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டின் பரிசோதனையின் போது குறித்த அமைச்சுகளால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தமது பிரதான செயற்திட்டங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை.

ii. 2019 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் பரிசோதனையின் போது 37 அமைச்சுகளால் தமது செயற்திட்டங்களினூடாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்குரிய இலக்குகளை தொடர்புபடுத்தும் போது பாதீட்டு மதிப்பீடுகளில் உள்ளடக்கப்படாத இலக்குகளின் எண்ணிக்கை 95 ஆகும். அதாவது மொத்த இலக்குகளான 169 இன் 56 சதவீதமாகும். மேற்படி 95 இலக்குகளும் அரசின் எந்தவொரு அமைச்சினதும் பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் கருத்திற்கொள்ளப்படாத இலக்குகள் பட்டோலை 3 இல் காண்பிக்கப்பட்டுள்ளது. 2019 இன் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கு இலக்குகளை இனங்காணாத அமைச்சுகளின் எண்ணிக்கை 09 ஆகும். விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

   i. பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சரவையல்லாத அமைச்சு.
   ii. தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரவையல்லாத அமைச்சு.
   iii. வெகுசன ஊடக அமைச்சரவையல்லாத அமைச்சு.
   iv. விசேட பிரதேச அபிவிருத்தி அமைச்சரவையல்லாத அமைச்சு
   v. தபால் மற்றும் முஸ்லிம் மத விவகார அமைச்சு.
   vi. வெளி விவகார அமைச்சு.
   vii. மின்வலு, சக்திவலு மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சு.
   viii. அரச தொழில் முயற்சிகள்,மலைநாட்டு அபிவிருத்தி அமைச்சு.

ix. தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு.

### 3.2.5 சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் அம்சங்களை கருத்திற்கொள்ளல்

**(அ)** நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் ஆகிய மூன்று அம்சங்களை அரச பாதீட்டு மதிப்பீட்டினை சமர்ப்பிக்கும் போது நடைமுறைப்படுத்தல்.




(ஆ) அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் காணப்படும் நியமங்கள் (5130) இன் 1.10 இன் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலினுள் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி ஆகிய மூன்று அம்சங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புறுவதன் மூலம் மற்றும் சமப்படுவதன் மூலம் மாத்திரமே நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி பயணிக்க முடியும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நியமத்தின் 2.9.8 இன் பிரகாரம், அரச பாதீட்டு மதிப்பீடுகளை தயாரிக்கும் போது பாதீட்டு ஒதுக்கங்களில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தின் அளவு மற்றும் அவற்றுள் சுற்றாடல் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் பணம் எவ்வளவு என்பது ஆழமாக பரீட்சிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் அம்சங்களும் சமனடைவதன் மூலம் சுற்றாடல் வழங்கள் பாதுகாக்கப்படுவதற்காக பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் சுற்றாடல்

இலக்குகள் இனங்காணப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் சுற்றாடல் வளங்களை மேம்படுத்துவததற்கான 13 இலக்குகளினூடாக 17 இலக்குகளுக்காக 52 அமைச்சுகளில் 11 அமைச்சுகளால் மாத்திரம் நிதி ஒதுக்கீடு செய்திருந்தன.

(ஈ) 2019 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீடுகளில் சுற்றாடல் வளங்களை மேம்படுத்துவதற்காக 13 இலக்குகளை அடிப்படையாக கொண்டு 17 செயற்திட்டங்களுக்காக 37 அமைச்சுகளில் 10 அமைச்சுகள் மாத்திரம் நிதி ஒதுக்கீடு செய்திருந்தன.

## 3.2.6 அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (2017-2020) – இயற்கை வளங்களை பாதுகாத்தல்

---

நிர்ணயிக்கப்பட்ட முதலீடுகளை மேற்கொண்டு வலுவான பொருளளாதார அபிவிருத்தியினை அடைந்துகொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் அதே சந்தர்ப்பத்தில் சூழலின் தரத்தினை பாதுகாத்து நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி பயணிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சுற்றாடல் முகாமைத்துவத்தினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. மாசடையாத சுற்றாடல் மற்றும் நஞ்சற்ற உணவு முறைமை ஆகியவற்றை ஏற்படுத்துவதற்காக சுற்றாடல் பாதுகாப்பினூடாக பச்சை அபிவிருத்தி எனும் எண்ணக்கருவின் மூலம் முக்கியமமான வகிபாகம் நிறைவேற்றப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டின் பின்னர் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் பிரகாரம் பயணித்து அரசின் கொள்ளைச் சட்டகத்தினுள் (2017-2020) அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் சுற்றாடல் பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. இலங்கை 2018 ஆம் ஆண்டின் போது சுற்றாடல் செயலாற்றல் சுட்டியில் பெற்றிருந்த இடத்திலிருந்து 2020 ஆம் ஆண்டளவில் ஆகக் குறைந்தது 25 ஆம் இடத்தினை நோக்கி செல்வதற்காக அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

**அட்டவணை 1 - சுற்றாடல் செயலாற்றல் குறிகாட்டி**

| ஆண்டு | சுற்றாடல் செயலாற்றல் குறிகாட்டி |
|---|---|
| 2016 | 108 |
| 2017 | வெளியிடப்பட்டிருக்கவில்லை |
| 2018 | 60 |
| 2019 | வெளியிடப்பட்டிருக்கவில்லை |
| 2020 | 25 |

**மூலம் : 2017-2020 அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்**

மேற்படி சுற்றாடல் செயலாற்றல் குறிகாட்டியின் நிலைமை அடைந்துகொள்வதற்காக தமது கொள்கைத் திட்டத்தினுள் இனங்காணப்பட்ட சுற்றாடல் பிரச்சினைகள் பின்வருமாறு ஆகும்.

**(அ) காடழிப்பு**

2015 – 2017 அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை தயாரிக்கும் போது காணப்பட்ட காடழிப்பு வீதம் 29.7 சதவீதம் ஆகும். அத்துடன், 2018 யூலை மாதம் நிலைபேறான அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் முன்வைக்கப்பட்ட தன்னார்வ தேசிய மீளாய்வின் பிரகாரம் அது 29 சதவீதமாக காணப்பட்டது. அதன் பிரகாரம் கிரமமான முறையில் காடழிப்பு அதிகரித்துள்ளமை அவதானிக்கப்படுகின்றது.



**(ஆ) கடற்கரை சார்ந்த வலயங்கள் மாசடைதல்**

பல தசாப்தங்களாக இலங்கையின் கடலோரங்களின் மாசடைதல் அதிகரித்து செல்வதுடன், இவ்வாறு கடலோரங்கள் மாசடைவதற்கான பிரதான காரணங்களாக சனத்தொகை அதிகரிப்பு மற்றும் சுற்றுலா மற்றும் கைத்தொழில் துறைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகியன இனங்காணப்பட்டுள்ளன. மலக்கழிவுகள், நைட்ரஜன் மற்றும் பொசுபரசு போன்ற செறிவூட்டப்பட்ட சேதன கழிவுகள், பார உலோகங்கள், எண்ணெய் மற்றும் கடலோர அரிப்பு ஆகியன கடலோரங்கள் மாசடைவதற்கு தாக்கம் செலுத்தும் பிரதானமான மாசுக் காரணிகள் ஆகும்.



**(இ) வளி மாசடைதல்**

கொழும்பு மற்றும் கண்டி ஆகிய நகரங்களில் வளி மாசடைதல் பிரதானமான சுற்றாடல் பிரச்சினையாக மாறியுள்ளது. சுமார் 4 மில்லியனுக்கும் அதிகமான ஓட்டத்தில் ஈடுபடும் வாகனங்களை கொண்ட போக்குவரத்து துறையானது வளி மாசடைதலுக்கு பிரதானமான காரணியாக இனங்காணப்பட்டுள்ளது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கொழும்பு கோட்டையின் சஞ்சரிக்கும் வளியின் தரத்தின் பின்தொடர் நிலையத்தின் 2017 ஆம் ஆண்டின் தரவுகளின் பிரகாரம் நிகர சிறு துகள் பொருளின் வருடாந்திர சராசரி நிலை 24 மணித்தியாலங்களின் pm 10இன் சராசரி பெறுமதி 63 $Ugm^{-3}$ஆகும். பத்தரமுல்ல காற்று தர பின்தொடர்தல் மையத்தின் தரவுகளின் பிரகாரம் 2019 நவம்பர் மாதம் இன் pm 10பெறுமதி 43.16 ஆகும். உலக சுகாதார அமைப்பின் (WHO)நியமத்தின் பிரகாரம்pm 10பெறுமதி = 50 $Ugm^{-3}$அல்லது அதனை விட குறைவாக காணப்பட வேண்டும். எனினும், அண்மைக்காலமாக கொழும்பு நகரில் வளி மாசடைதல் குறித்த நியமத்தின் மட்டத்தினை விஞ்சுதல் அல்லது அந்த நியமங்களின் அண்மிய மட்டங்களில் காணப்படுவதாக தரவுகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கொழும்பு நகரின் வளி மாசடைந்தவாறு காணப்படுவதான மேற்படி தரவுகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.



**(ஈ) நீர் மாசடைதல்**

இலங்கையில் நீர் மாசுபடுவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று மோசமான சுகாதாரம், சுத்திகரிக்கப்படாத (Treatment) அல்லது சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் மற்றும் நைட்ரேட் மற்றும் பாக்டீரியா புற நீர் மூலங்களுடன் இணைதல், தொழில்துறை மற்றும் விவசாய நச்சு இரசாயனங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் குவிதல் ஆகிய விடயங்கள் ஆகும். நகர்ப்புறங்களில் நீர் மாசுபடுவதற்கான உடனடி காரணம் உள்நாட்டு மற்றும் தொழில்துறை கழிவு நீர் மற்றும் கழிவுநீரை நீர்வழிகளில் சேர்தல் ஆகும். வேளாண்மை பகுதிகளில் நீர் மாசுபடுத்தும் வேளாண்மை

வேதிப்பொருட்கள் முக்கியமான நீர் மாசுக் காரணி ஆகும். அதற்கு மேலதிகமாக மாதிரி சோதனை செய்யப்பட்ட வணிக மற்றும் நிர்வாக நகரங்கள் வழியாக பாயும் களனி நதி உள்ளூர் நீர் தேவைகளை பூர்த்தி செய்வதில் பிரதானமாக உதவிய போதிலும், தொழில்மயமாக்கல் மற்றும் அங்கீகரிக்கப்படாத கட்டுமானம் காரணமாக களனி ஆற்றின் சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கு பொறுப்பான நிறுவனங்கள் போதியளவில் கவனம் செலுத்தியிருக்கவில்லை.



## (உ) யானை மற்றும் மனிதர்களுக்கிடையேயான மோதல்கள்

இலங்கையின் ஒட்டுமொத்த சனத்தொகையில் சுமார் 20 சதவீதமானோரால் முகங்கொடுக்கும் மிக முக்கியமான பிரச்சினை யானை மற்றும் மனிதர்களுக்கிடையேயான மோதல் ஆகும்.

| ஆண்டு | இழந்த உயிர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | மனிதர்கள் | காட்டு யானைகள் |
| 2010 | 81 | 227 |
| 2011 | 60 | 255 |
| 2012 | 73 | 250 |
| 2013 | 70 | 206 |
| 2014 | 67 | 231 |
| 2015 | 63 | 205 |
| 2016 | 88 | 279 |
| 2017 | 87 | 256 |
| 2018 | 96 | 319 |
| 2019 நவம்பர் மாதம் வரை | 114 | 379 |

மூலம் : வனசீவராசிகளள் மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் அறிக்கைகள்

அந்த பிரச்சினைகள் கிரமமாக அதிகரித்தவாறு உள்ளது. யானைகளின் இயற்கையான வாசஸ்தலங்கள் மனிதர்களால் கைப்பற்றப்படுகின்றமையால்

இந்த பிரச்சினை எழுந்துள்ளது. எனினும் இந்த பிரச்சினை தொடர்பில் இது வரையிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தோல்வியடைந்துள்ளமை யானை மற்றும் மனிதர்களின் மரணங்களின் அதிகரிப்பின் மூலம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.



**(ஊ) கழிவு முகாமைத்துவம்**

i. கழிவு உற்பத்தியானது துரிதமாக அதிகரித்தல் இலங்கையின் மிக முக்கியமான சுற்றாடல் பிரச்சினையாக மாறியுள்ளது. 1970 ஆம் ஆண்டின் போது 10 சதவீதமாக இருந்த நகர சனத்தொகையானது 2015 ஆம் ஆண்டளவில் 40% சதவீதம் வரை அதிகரித்துள்ளது. நாளொன்றிற்கு இலங்கையில் ஒட்டுமொத்தமாக சுமார் 6,500 முதல் 7,000 மொற்றிக் தொன்களுக்கு இடைப்பட்ட அளவிலான கழிவானது உற்பத்தியாவதுடன், அவற்றுள் சுமார் 39 சதவீதமான கழிவுகளே உரிய முறையில் அகற்றப்படுகின்றன என்பது 2017-2020 அரச முதலீட்டு நிகழச்சித்திட்த்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. தகவல் தொழில்நுட்பத் துறையின் துரித முன்னேற்றத்துடன் சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கும் பொருட்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ள இலத்திரனியல் கழிவுகளின் உற்பத்தியானது அதிகரித்துள்ளது. மருத்துவமனைகளால் சுமார் 5,400 மெற்றிக் தொன்கள் அளவிலான மருத்துவக் கழிவுகள் சூழலுக்கு விடுவிக்கப்படுகின்றது.

**இலத்திரனியல் கழிவின் உற்பத்தி மற்றும் சேர்க்கை**

| கழிவு வகை | ஆண்டொன்றில் உற்பத்தியாகும் அளவு | ஆண்டொன்றில் சேர்க்கப்படும் அளவு | பற்றாக்குறை |
|---|---|---|---|
| கணனி இயந்திரங்கள் | 53,146 | 15,944 | 37,202 |
| அச்சீட்டு இயந்திரங்கள் | 19,509 | 5,852 | 13,657 |
| தொலைக்காட்சி இயந்திரங்கள் | 63,471 | 19,042 | 44,432 |
| கையடக்க தொலைபேசிகள் | 903,544 | 271,063 | 632,481 |
| குளிர்சாதனப் பெட்டி | 39,009 | 11,702 | 27,307 |
| வளிச்சீராக்கல் இயந்திரம் | 7,092 | 2,127 | 4,965 |
| போட்டோ பிரதி இயந்திரங்கள் | 758 | 227 | 53 |
| துணி துவைக்கும் இயந்திரம் | 11,107 | 3,332 | 7,775 |
| CLF மின்குமிழ்கள் (மில்லியன்) | 2.4 | 0.72 | 1.68 |

**மூலம்: மத்திய சுற்றாடல் அதிகாரசபை - 2008**

ii. 2008 ஆம் ஆண்டின் பின்னரான தகவல்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் காணப்படவில்லை. தரவுகள் நாளதுவரையாக்கப்படடாமையால் அண்மைக்கால இலத்திரனியல் கழிவுகள் தொடர்பான தீர்மானங்களை எடுத்தல் பிரச்சினைக்குரியதாகும். முறையான இலத்திரனியல் கழிவு முகாமைத்துவமொன்றிற்காகவும், உரிய நிறுவனங்களின் திட்டங்களை தயாரிப்பதற்காகவும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல் தொடர்பில் அளவிடவும் குறிகாட்டிகள் மற்றும் அடிப்படை தரவுகள் அவசியமானதாக அமையும். மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சுற்றாடல் தொடர்பான அனைத்து தரவுகளை பேண வேண்டிய போதிலும், அவ்வாறு அல்லாத காரணத்தால் தற்போதைய நிலைமையை அளவிட முடியாதுள்ளது.

iii. திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பிலும் ஊரிய உள்ளுராட்சி நிறுவனங்களால் நிரந்தரமான தீர்வொன்று வழங்கப்பட்டிராமை, சுற்றாடல்

ரீதியிலும் மனித வாழ்வில் முக்கிய தாக்கம் செலுத்தும் காரணியாகும். அந்த நிறுவனத்தால் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், நிறுவுதல், மேற்பார்வை செய்தல் மற்றும் கழிவுகளை ஈடுபடுத்தும் பணிகளிலான குறைபாடுகள் இது தொடர்பில் தாக்கம் செலுத்தியிருந்தன.

**(எ) இடர் முகாமைத்துவம்**

i. புவி வெப்பமடைதல் அதிகரிப்பிற்கு இலங்கையின் பங்களிப்பானது அளவிட முடியாத அளவில் மிகச் சிறியதாயினும், தீவொன்றானமையால் நாம் பாதகமான காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் பாதகமான தாக்கங்களுக்கு உட்படும் ஆபத்து மிகவும் அதிகம் ஆகும். அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (2017-2020) இன் பிரகாரம் இயற்கை அனர்த்தங்களின் காரணமாக இலங்கை பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கு ஏற்படும் நட்டம் ஆண்டொன்றிற்கு சுமார் ரூபா 50 பில்லியன்கள் ஆகும். அத்துடன், வருடாந்தம் பொருளாதாரத்தின் நட்டமானது மொத்த தேசிய உற்பத்தியில் 0.5 சதவீதத்திற்கும் மொத்த அரச செலவினத்தில் சுமார் 3 சதவீதத்திற்கு சமனானது என கணிப்பிடப்பட்டுள்ளது. கடந்த தசாப்பதத்தினுள் சுமார் 13 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் இடர்களுக்கு முகங்கொடுத்துள்ளதுடன், அவர்களுக்கான நிவாரணங்களுக்காக ரூபா 6 பில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. இலங்கை 2017 ஆம் ஆண்டின் போது உலக காலநிலை மாற்ற அபாயச் சுட்டியின் 2 ஆம் இடத்தினை அடைந்துள்ளது. விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்படுகின்றது.

**2017 காலநிலை அபாயக் குறிகாட்டியின் பிரகாரம் இலங்கையின் நிலை**

| நாடு | நிலை |
|---|---|
| பிசம்ரோ ஜிகென் | 1 |
| இலங்கை | 2 |
| டொவினியா | 3 |
| நேபாளம் | 4 |
| பெரு | 5 |

மூலம்: உலக காலநிலை அபாயக் குறிகாட்டி

ii. அதிக மழை காரணமாக நதிகள் பெருக்கெடுக்கின்றமையை பெருமளவில் அவதானிக்கப்படும் இடர் நிலமையொன்றாவதுடன், அதனை கட்டுப்படுத்தல் தொடர்பில் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக மலைப்பிரதேசங்களில் அறிக்கையிடப்படும் மண்சரிவுகள் தொடர்பில் அந்த இடங்களை இனங்காணல், மீளக் குடியமர்த்துதல் மற்றும்

மண்சரிவிற்கான காரணங்களை கட்டுப்படுத்துவதற்கு போதியளவில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2.7 அரச நிறுவனங்களின் பங்களிப்பு

**(அ) மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாற்றல்**

2019 மே 07 ஆந் திகதிய ஆம் 03/04/45/SD இலக்க மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் அந்த அமைச்சினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 12, 13,14 மற்றும் 15 ஆகியவற்றுக்காக நேரடியாக கடப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த நோக்கங்கள் பின்வருமாறு ஆகும்.

i. நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி – 12
ii. காலநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கத்தைத் தணிக்க உடனடி நடவடிக்கை எடுப்பது– 13
iii. நிலைபேறான அபிவிருத்திகான சமுத்திர வளங்களின் பாதுகாப்பு – 14
iv. பௌதீக சுற்றாடல் கட்டமைப்புகளின் பாதுகாப்பு, மீளமைப்பு மற்றும் நிலைபேறான பாவனை – 15
v. 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் அமைச்சினால் இனங்காணப்பட்ட 7 இலக்குகள் காணப்பட்டன. அதன் விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| இலக்குகள் | விபரங்கள் |
|---|---|
| 2.1 | பட்டினியை ஒழித்தல் |
| 6.1 | குறைந்த விலையில் பாதுகாப்பான முறையில் குடிநீரினை வழங்குதல் |
| 7.1 | குறைந்த விலையில் நம்பகத்தன்மையான நவீன வலுச்சக்தியை வழங்குதல் |
| 13.1 | இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் இயலுமையை அதிகரித்தல் |
| 12.5 | கழிவு உற்பத்தியை குறைத்தல், தடுத்தல், மீள்சுழற்சிக்கு உட்படுத்தல் மற்றும் மீள பயன்படுத்தல் |
| 15.1 | புவியின் நிலைபேறான பயன்பாடு |
| 15.2 | நிலைபேறான காடுகளின் முகாமைத்துவம் |

மேற்படி தகவல்களின் பிரகாரம், அமைச்சின் பொறுப்பாக 14 நோக்கங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், 2018 பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் செயற்திட்டம் இனங்காணப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

vi. 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் இனங்காணப்பட்ட 4 இலக்குகள் காணப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| இலக்குகள் | விபரங்கள் |
|---|---|
| 12.5 | கழிவு உற்பத்தியை குறைத்தல், தடுத்தல், மீள்சுழற்சிக்கு உட்படுத்தல் மற்றும் மீள பயன்படுத்தல் |
| 2.1 | பட்டினியை ஒழித்தல் |
| 6.1 | குறைந்த விலையில் பாதுகாப்பான முறையில் குடிநீரினை வழங்குதல் |
| 13.1 | இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் இயலுமையை அதிகரித்தல் |

மேற்படி தகவல்களின் பிரகாரம், அமைச்சின் பொறுப்பாக நோக்கம் 14 மற்றும் 15 இனங்காணப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீடுகளின் பிரகாரம் செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து செயற்திட்டங்கள் மற்றும் பணிப்பொறுப்புகள் ஆகியவற்றை நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இலக்குகளின் கீழ் செயலாற்றல் குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டுள செயற்முன்னேற்றத்தினை அறிக்கையிடுவதற்காக தரவுகள் சேகரிக்கப்படுவதாகவும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது செயலாற்றல் இலக்குகள் தயாரிக்கப்பட்டிராததால், இலக்கிடப்பட்ட செயலாற்றல் குறிகாட்டிகளின் பிரகாரம் செயன்முன்னேற்றத்தினை அறிக்கையிட முடியாது என அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல் முன்வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மண் சரிவு மற்றும் முக்கியமான இயற்கை அனர்த்தம் தொடர்பான முக்கியமான தகவல்களை அரசு மற்றும் மக்களுக்கு வழங்க வேண்டிய இந்த நிறுவனம் 2019 ஆம் ஆண்டின்

போதும், தமது நிறுவனத்தின் செயலாற்றல் இலக்குகளுக்குரிய செயன்முன்னேற்றத்தினை பெற்றிருக்கவில்லை.

**(இ) மத்திய சுற்றாடல் அதிகாரசபை**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சுற்றாடலை பாதுகாக்கும் பொறுப்பு மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு உரியது ஆகும். அதன் பிரகாரம், நிலைபேறான அபிவிருத்தியின் சுற்றாடல் அம்சத்தினை பாதுகாப்பதற்காக இந்த நிறுகவம் வழங்கும் பங்களிப்பு தொடர்பான பரிசோதனையின் போது சுற்றாடல் அதிகாரசபையின் 2019 ஆம் ஆண்டிற்குரிய தரவுகளின் பிரகாரம் நகர திண்மக் கழிவுகளில் 84 சதவீதம் உரிய முறையில் அப்புறப்படுத்தப்படாமை, தேசிய மீள்சுழற்சி விகிதம் 5 சதவீதமாக காணப்படல், நபரொருவருக்கான அபாயமிக்க கழிவுகளின் உற்பத்தி 2018 ஆம் ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையிலும் 9.5 கிலோ கிராம்களிலிருந்து 13 கி.கிராம்கள் வரை அதிகரித்தமை, முறைமைப்படுத்தப்படும் அபாயம் மிக்க கழிவு வீதம் குறைவடைதல், எரியூட்டப்படும் மருத்துவக் கழிவுகளின் வீதம் குறைவடைதல், மீள் சுழற்சிக்காக இறக்குமதி செய்யப்படும் இலத்திரனியல் இறக்குமதியின் சதவீதம் மாத்திரம் அதிகரித்தல் ஆகிய செயலாற்றல் தகவல்கள் இதன் போது முக்கிய இடத்தினை பெறுகின்றன. வெளிப்படுத்தப்பட்டவாறு குறித்த நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நோக்கி அண்மிக்கும் மட்டத்தினை அடைந்திருக்கவில்லை. விபரங்கள் பட்டோலை 04 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.

**(ஈ) சர்வதேச மற்றும் உள்நாட்டு நியமச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச அமைப்பின் நியம இலக்கம் 5130 இன் 2.19 இன் பிரகாரம் ஏதேனும் செயற்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும் இடத்தில் இடம்பெறும் பணிகளில் சுற்றாடல் முகாமைத்துவத்தின் அடிப்படையில் பெறுபேறுகளை அடைந்துகொள்ள முடியும் என்பது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக வெளியிடப்பட்டுள்ளது.

அந்த சர்வதேச நியமங்களின் நோக்கங்களாவது சுற்றாடல் முகாமைத்துவத்தினை பொதுவான பிரவேசத்தினுள் மேற்கொள்ளல் மற்றும் அதன் மூலம் சுற்றாடல் செயலாற்றலினை அளப்பதாகும்.இந்த நியமங்களை அனைத்து நிறுவனங்களாலும் பயன்படுத்த முடியுமானதுடன்,வெவ்வேறு

புவியியல், கலாச்சார மற்றும் சமூக சூழல்களில் பொதுவானவை.இந்த சர்வதேச மற்றும் தேசிய தரங்களுக்கு இணங்குவதன் மூலம், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளையும் சேவைகளையும் பொதுமக்களுக்கு மிக உயர்ந்த தரத்துடன் வழங்க முடியும், இதன் மூலம் சுற்றுச்சூழல் முகாமைத்துவத்தினை உருவாக்க முடியும். இலங்கையில் தர சான்றிதழ்களை வழங்கும் அரச அமைப்பு இலங்கை தர நிர்ணய நிறுவனம ஆகும். இந்த நிறுவனம் அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு தரச் சான்றிதழ்களை வழங்குகிறது. 2019 ஆம் ஆண்டில் 1339 அரசு மற்றும் தனியார் துறை சான்றிதழ்களை நிறுவனங்களுக்குதரச் சான்றிதழ் வழங்கியுள்ளது.

**(உ) தேசிய திட்டமிடல் திணைக்களம்**

i. அபிவிருத்தியை நிலைபேறானதாக பேணிச் செல்வதற்கு பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் ஆகிய அம்சங்களின் சமநிலையை பேணிச் செல்வதற்காக 2018 ஒக்தோபர் 02 ஆந் திகதிய 18/2222/805/069ஆம் இலக்க அமைச்சரவை பிரமாணக்குறிப்பின் பிரகாரம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டின் சனவரி 01 ஆந் திகதிய MNPEA/2/2019ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் 2019 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள் தொடர்பில் செயற்திட்டங்களை சமர்ப்பிக்கும் வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. இந்த வழிகாட்டியின் மூலம் அரசின் புதிய செயற்திட்டங்களை முன்வைக்கும் போது அவை செயற்திறனான முறையில் முன்வைக்கப்பட வேண்டிய முறை மற்றும் செயற்திட்டம் ொடர்பில் பொருளாதார, சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தி ஆகியவற்றை அடைந்துகொள்வதற்காக செயற்திட்டங்களுக்காக முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் முறை குறிப்பிடப்பட்டிருந்தது. அது அனைத்து அரச நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

iii. இந்த வழிகாட்டிகளின் பிரகாரம் 2019/01/10ஆந் திகதி முதல் முன்வைக்கப்படும் செயற்திட்டங்களுக்காக இந்த வழிகாட்டி பின்பற்றப்பட வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டிருந்தது.

iv. அதன் பிரகாரம், பொருளாதார பணிகளை செயற்படுத்தும் துறைகள் 8 காணப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டிற்குரியதாக முன்வைக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை 322 ஆகும்.

அவற்றுள் ஆரம்ப அங்கீகாரத்தினை பெற்றிருந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை 160 ஆக காணப்பட்டதுடன், அது 50 சதவீத அளவாகும். இரண்டாவது அங்கீகாரம் பெற்றுக்கொண்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை 61 ஆக காணப்பட்டதுடன், அது 19 சதவீதம் ஆகும். அதன் பிரகாரம், குறித்த செயற்திட்டங்களுக்காக அரசினால் குறித்துரைக்கப்பட்ட நடைமுறையின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறல்லாத போது அதன் மூலம் 2030 ஆம் ஆண்டளவில் இலங்கையை நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நோக்கி பயணிப்பது சிரமமாகக்கூடும்.

## 3.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வளங்கள் மற்றும் இயலுமையை இனங்காணல்

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக நேரடியாக தாக்கம் செலுத்தும் முக்கியமான தேவைப்பாடானது நிதியீட்டம் ஆகும். அதன் மூலம் பௌதீக மற்றும் மனித வளங்களை பெற்றுக்கொள்வதற்கும் அவற்கை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துவதற்குமான இயலுமை கிடைக்கும். தேவைப்பாட்டினை இனங்காணல், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கான இணலுமை தொடர்பில் பின்வரும் நிலமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் போது தற்போதைய உபாயமார்க்கமானது பிரதான நிரலில் சேர்த்தல் ஆகும். (Main Streaming) அதன் காரணமாக நிதி ஒதுக்கீடு செய்வதற்கான குறுங்கால உபாயமார்க்கமொன்றாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கான இலக்குகளுக்காக நிதியீட்டம் செய்வதற்கு வருடாந்த பாதீட்டினை பயன்படுத்தி தேவையான நிதியினை வழங்குவதன் மூலம் அந்த நடைமுறை இலகுபடுத்தப்படும். நிதியீட்டத்தின் மூலங்களாவது வரி மற்றும் வரியல்லாத வருமானங்கள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் பெறுவனவுகள் ஆகும். அது தொடர்பிலான பரிசோதனையின் போது நாட்டில் நிலவும் தன்மையினுள் நிதியீட்டமானது சிரமமான விடயமொன்றாக அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் போது நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுடன் தொடர்புபடுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்கான மொத்த பாதீட்டு மதிப்பீடு ரூபா 2,997,845 மில்லியன் (கடன் செலுத்தல்கள் கழிக்கப்பட்டு) ரூபா 414,075 அல்லது 14 சதவீதம், 40 அமைச்சுகளுக்காக தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்தினால் இனங்காணப்பட்டு ஒதுக்கீடு

செய்யப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுடன் தொடர்புபடுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்கான மொத்த பாதீட்டு மதிப்பீடு ரூபா 3,340,000 மில்லியன் (கடன் செலுத்தல்கள் கழிக்கப்பட்டு) ரூபா 572,040 அல்லது 17 சதவீதம், 28 அமைச்சுகளுக்காக தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்தினால் இனங்காணப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 3.3.1 2030 நிகழ்ச்சி நிரலினை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வளங்கள் மற்றும் இயலுமைகள்

சர்வதேச ரீதியிலான இணைப்புகள் பின்வருமாறு ஆகும்.

**(அ) சர்வதேச அமைப்புகளுடன் தொடர்புபடுத்தல்.**

i. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் துரித திரண்ட மதிப்பீட்டினை (RIA)தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

ii. தன்னார்வ தேசிய மீளாய்வு நடைமுறை (UNRC மற்றும் UNESCAP)

iii. 2018 யூலை மாதம் இடம்பெற்ற தன்னார்வ தேசிய மீளாய்வுக்காக தேசிய பன்முக சமூக ஆலோசனை செயலமர்வு

iv. மொனராகலை மாவட்டத்தின் ஐந்து வருட மாவட்ட அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்தல் (UNDP)

v. சனாதிபதி செயலகம் மற்றும் UNPFAஇணைப்பு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் அரச நிறுவனங்களின் அடிப்படை தரவுகளை சேகரிப்பதற்கான குறிகாட்டிச் சட்டகமொன்றினை தயாரித்தல்.

vi. ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி சட்டகம் (2018-2022) (UNSDF).

vii. 13 ஆவது ஐக்கிய நாடுகளின் பிரதிநிதித்துவ நிகழ்ச்சித்திட்டம் இலங்கையுடன் பல்வேறு உடன்படிக்கைகளுடாக ஒத்துழைப்பு நல்கியுள்ளது. அந்த நிறுவனங்களானவை ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF) மற்றும் ஆசிய மன்றம் ஆகியவற்றின் மூலம் நீதிமன்ற அமைச்சுடன் இணைந்து சிறுவர்களுக்கான சினேகபூர்வமான நீதிமன்றங்களை தாபிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

### (ஆ) சர்வதேச அமைப்புகளுடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திடல்

17 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் 6 இலக்குகளின் கீழ் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக பிராந்திய சர்வதேச ஒத்துழைப்பினை அதிகரித்தல், விசேடமாக ஐக்கிய நாடுகளின் மட்டத்தில் தற்போது நிலவும் பொறிமுறைகளுக்கிடையே ஒத்துழைப்பினை அதிகரித்தல், பிராந்திய மட்டத்தில் தொழில்நுட்ப வசதிகளை ஒழுங்குபடுத்தும் பொறிமுறையொன்றினூடாக ஒவ்வொருவருடன் இணங்கிய நிபந்தனைகளின் அடிப்படையில் பகிர்ந்து அதிகரிக்க வேண்டும். நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நோக்கி பயணிக்கும் போது நாடொன்று மற்றைய நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திட வேண்டும். அந்த உடன்படிக்கைகளின் மூலம் உலகின் அனைத்து நாடுகளும் ஒரே காலப்பகுதியில் ஒரே நோக்கத்தில் தமது அரசின் கொள்கைகளுக்கு பொருந்தும் வகையில் இலக்குகளை தயாரித்து அதற்கான குறிகாட்டிகளை தயாரித்துக்கொள்ளும். சர்வதேச அமைப்புகளுடன் தொடர்புகளை கட்டியெழுப்புவதன் மூலம் நிதி மற்றும் பௌதீக வளங்களை பெற்றுக்கொள்ளல், அறிவினை பெற்றுக்கொள்ளல் மற்றும் பகிர்ந்துகொள்ளல், பயிற்றுவித்தல், இணங்கிய நியமங்களின் பிரகாரம் செயற்படல் ஆகியவற்றிற்கு இதன் மூலம் சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. ஒவ்வொரு அரச நிறுவனமும் விடயப்பரப்பின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மிப்பதற்காக வளங்கள் மற்றும் இயலுமைகளை அபிவிருத்தி செய்வதற்காக சர்வதேசத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது பாதீட்டு மதிப்பீட்டு பரிசோதனையின் போது இலங்கையானது பாதீட்டு முன்மொழிவுகளினூடாக பிரதான செயற்திட்டங்களினூடாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நோக்கி நகரும் போது நிதி ஒதுக்கீடு செய்யும் போது அவ்வாறான உடன்படிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டின் போது சுற்றுலா அபிவிருத்தி,வனசீவராசிகள், கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சினால் சட்டரீதியற்ற தாவரங்கள் மற்றும் காட்டு விலங்குகளை கொண்டு செல்வதனை தடுப்பதற்காக சர்வதேச நிறுவனங்களுடன் உடன்படிக்கைகள் (CITES) கைச்சாத்திடப்பட்டிருந்தன. எனினும், பின்வரும் உடன்படிக்கைகளுடன் செயற்படுவதற்காக குறித்த அமைச்சுகளால் இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

| தொடர் இலக்கம் | நோக்கம் | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது சர்வதேச அமைப்புகளுடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்குரியதாக இலக்குகள் இனங்காணப்படாத சந்தர்ப்பங்கள் |
|---|---|---|
| i. | 2 | டோஹார் நிகழச்சி நிரலின் பிரகாரம் ஏற்றுமதி ஊக்குவிப்பு, சந்தைகளை உருவாக்குவதற்கு. |
| ii. | 5 | பீஜிங் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான அறிவினை பெற்றுக்கொள்வதற்கு. |
| iii. | 8 | சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சர்வதேச வேலைவாய்ப்பு ஒதுக்கீடு நடைமுறை மூலம் வேலைவாய்ப்பைப் பெறுதல். |
| iv. | 10 | உலக வர்த்தக சங்கத்துடன் இணைப்புகளை கட்டியெழுப்புதல் |
| v. | 11 | சென்டியல் திட்டத்தின் பிரகாரம், அபிவிருத்தி திட்டம் பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றாடல் ஆகிய 3 விடயங்களை தொடர்புபடுத்தி நடைமுறைப்படுத்துவதற்கு, |
| vi. | 13 | ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல். |
| vii. | 14 | உலக வர்த்தக சங்கத்தின் மீனவ மானியங்களை பெற்றுக்கொள்ளல், கடல் வளங்களின் மூலம் பொருளாதார நலன்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் சமுத்திர விஞ்ஞான ஆணைக்குழுவின் நடைமுறையின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடல். |
| viii. | 15, 16 | சர்வதேச மட்டத்தில் நிறுவனங்களின் இலங்கையர்களின் பங்களிப்பினை ஊக்குவித்தல். |
| ix. | 17 | டோஹார் நிகழ்ச்சி நிரலினை பின்பற்றி நோக்கங்களை நோக்கி பயணிப்பதற்கான பங்குடமையை கட்டியெழுப்புதல். |

## (இ) உள்நாட்டு இயலளவு அபிவிருத்தி

இலங்கை மாணவர்கள் விஞ்ஞானம், கணிதம் மற்றும் தொழில்நுட்ப விடயப்பரப்புகளில் ஈடுபடல் மிகவும் குறைவாக காணப்படுகின்றது. அதன் பிரகாரம், கடந்த 03 வருடங்களில் இலங்கையின் அரசாங்க பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற பட்டதாரிகளின் சராசரியில் 28 சதவீதமானோர் விஞ்ஞானம், கணிதம், பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பட்டங்களை பெற்றுக்கொள்கின்றமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

**இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களில் பட்டங்களை பெற்றுக்கொள்ளல்**

| விடயப்பரப்பு | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|
| விஞ்ஞானம் | 2711 | 3027 | 3142 |
| பொறியியல் விஞ்ஞானம் | 1344 | 1617 | 1713 |
| மருத்துவ விஞ்ஞானம் | 1145 | 1135 | 1176 |
| பல் அறுவைச் சிகிச்சை | 79 | 91 | 148 |
| கால்நடை மருத்துவம் | 69 | 73 | 79 |
| விவசாய விஞ்ஞானம் | 710 | 799 | 742 |
| கட்டடக்கலை மற்றும் அளவு ஆய்வு | 77 | 224 | 355 |
| கணனி விஞ்ஞானம் | 1043 | 946 | 1153 |
| பட்டங்களை பெற்றுக்கொண்ட எண்ணிக்கை (விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம்) | 7178 | 7912 | 8508 |
| பட்டங்களை பெற்றுக்கொண்ட மொத்த எண்ணிக்கை | 25,676 | 29,083 | 30,668 |
| பட்டத்தினை பெற்றுக்கொண்ட மாணவர்களில் விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்ப பட்டங்களை பெற்ற மாணவர்களின் சதவீதம் | 28% | 27% | 28% |

**மூலம்: இலங்கை மத்திய வங்கி அறிக்கை**

இலங்கையின் கணனி நிபுணத்துவம் 27.5 சதவீதம் (2016) உலகளாவிய புத்தாக்க குறிகாட்டியில் இலங்கை 127 நாடுகளில் 90 ஆவது இடத்தினை பெற்றிருந்ததுடன், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.1 சதவீதம் (2013) ஆனமையால் 09 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் 5 இலக்குகளின் கீழ் விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளை அதிகரித்தல், கைத்தொழில் துறையின் தொழில்நுட்ப இயலளவினை அதிகரித்தல், புத்தாக்கம், ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் நபர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், அரச மற்றும் தனியார் துறையின் ஆராய்ச்சி செலவினங்களை மேற்கொள்ள வேண்டிய போதிலும், அந்த நிலமை இலங்கையில் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றது. அதன் பிரகாரம், இலங்கை மேற்படி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான உள்நாட்டு இயலுமையை அதிகரிப்பதற்காக அரசின் அனைத்து நிறுவனங்களும் கவனம் செலுத்த வேண்டும்.

**(ஈ) இலங்கை மத்திய வங்கியால் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிய நிதி மேம்படுத்தல்**

நிதி நிறுவனங்கள் வங்கியின் பொருளாதார செயற்பாடுகளுக்கு உதவுவதன் மூலம் அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்கான பணிப்பொறுப்பினை கொண்டிருப்பதுடன், அவற்றுள் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் தாக்கங்களை ஏற்படுத்தும். நிதி நிறுவனங்களால் இயற்கை சூழலுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படுவதாக நிதித் துறை அறிந்துள்ளதுடன், அதன் காரணமாக கடந்த பல தசாப்பதங்களினுள் நிலைபேறான நிதியீட்டக் கொள்கைகள் அபிவிருத்தியடைந்துள்ளன.

i. அபாய முகாமைத்துவம் - நிதி மானியங்கள் - சுற்றாடலுக்கு மற்றும் மக்களுக்கு ஏற்படும் அபாயத்தினை தடுத்தல்

ii. கடன் உருவாக்கம் - சுற்றாடலுடன் சிநேகபூர்வமான சமூக பொறுப்புடனான வியாபாரங்களுக்காக கடன் வழங்குதல்.

முகாமைத்துவம் மற்றும் கடன் உருவாக்கத்திற்காக முன்னோக்கிய பார்வையொன்றினை உருவாக்கியவாறு உள்ளதாக 2016 ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் மூலம் இலங்கையின் நிதி நிறுவனங்களுக்கான வழிகாட்டல்கள் மூலம் அவர்களின் பங்களிப்பினை பெற்று இலங்கையின் நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் நிதிப் பிரிவின் செயற்பாடு மற்றும் கட்டமைப்பின் கீழ் நிலைபேறான அபிவிருத்திக்கான ஆலோசனைகள் மற்றும் நிலைபேறான நிதி மேம்படுத்தலின் கீழ் இடர் முகாமைத்துவ கடன் உருவாக்க முன்னோக்கிய பார்வை தொடர்பில் மத்திய வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அந்த நோக்கத்தின் பிரகாரம் செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## 3.4 2030 நிகழ்ச்சி நிரலின் பின்தொடர்தல், மீளாய்வு, செயற்படுத்தலின் செயன்முன்னேற்றத்தினை அறிக்கையிடல்

### 3.4.1 செயன்முன்னேற்றத்தினை கண்காணித்தல்

இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் அடைவினை செயன்முன்னேற்றத்தினை அவதானிப்பதற்கு முன்னர் இலங்கை மனிதவள அபிவிருத்தி நோக்கங்களை அடைந்த விதம் தொடர்பில் பரிசோதிக்க வேண்டும். அதன் போது அது தொடர்பில் தயாரிக்கப்பட்ட மனிதவள அபிவிருத்தி தொடர்பான இலங்கையின் அறிக்கையின் பிரகாரம் செயன்முன்னேற்றம் பின்வருமாறு ஆகும்.

#### (அ) மனிதவள அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல் (2000 – 2015)

2000 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் போது நிறைவடைந்த 08 மனிதவள அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் 44 இலக்குகளில் இலங்கை 13 இலக்குகளை மாத்திரமே அடைந்துள்ளது என 2014 ஆம் ஆண்டின் போது மனதவள அபிவிருத்தி நோக்கங்களுக்கான இலங்கையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான தமது திட்டங்களை தயாரிக்கும் போது பொறுப்பு கூற வேண்டிய நிறுவனங்கள் இலங்கை

அடைந்த மனிதவள அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில கவனம் செலுத்துதல் வேண்டும். அது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளின் தற்போதைய நிலை ஆகியவற்றை மீளாய்வு செய்யும் போது நோக்கம் 2.1, 6.1, 6.5, 7.9, 7.10 ஆகியவற்றை தவிர ஏனைய நோக்கங்களின் செயன்முன்னேற்றம் போதியளவில் இல்லாதிருந்ததுடன், அது தொடர்பில் உரிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நோக்கி பயணிக்கும் போது காணப்படும் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அதற்கு உரிய மாற்றுவழிகளை எடுக்க முடியும். அது தொடர்பான தகவல்கள் பட்டோலை 4 இல் காணப்படுகின்றது.

**(ஆ) கண்காணிப்பு, பின்தொடர்தல், மீளாய்வு மற்றும் அறிக்கையிடல் தொடர்பிலான பொறுப்பு மற்றும் பொறிமுறை**

2030 நிகழ்ச்சி நிரலின் பின்தொடர்தல், செயன்முன்னேற்றம் மற்றும் மீளாய்வு தேவைப்பாடு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 26(1) இன் பிரகாரம் 2030 நிகழ்ச்சி நிரலினை நடைமுறைப்படுத்தும் செயன்முன்னேற்றத்தினை கண்காணிப்பதற்கு, பின்தொடர்தலுக்கு, மீளாய்வு மற்றும் அறிக்கையிடலுக்கான பொறிமுறையொன்றினை தாபிப்பதற்கு சட்டரீதியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. INTOSAI நியம இலக்கம் 5130 இன் 2.22 இன் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மிக்கும் செயன்முன்னேற்றத்தினை அறிக்கையிடுவதற்கான நடைமுறையொன்று அரசினால் தெளிவாக இனங்காணப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் போது செயன்முன்னேற்றத்தினை அளவீடு செய்வதற்காக சபையினால் இலக்குகளுக்கு குறிகாட்டிகளை தயாரித்தல் மற்றும் அடிப்பன் தரவுகளை சேகரித்தல் ஆகியவற்றின் மூலம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் மீளாய்வு, கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் சட்டகமொன்று தயாரிக்கப்பட வேண்டும். எனினும், 2019 நவம்பர் வரையிலும் அது தொடர்பில் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் சட்டகமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) செயலாற்றல் குறிகாட்டிகள் மற்றும் தரவுகள்**

பொருத்தமான குறிகாட்டி சட்டகமொன்றின் மூலம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அதன் இலக்குகள், நடைமுறைப்படுத்தும் மூலோபாயத்தினை அபிவிருத்தி செய்வதற்கு, வளங்களை ஒதுக்கீடு

செய்வதற்கு, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளும் செயன்முன்னேற்றத்தினை அளவீடு செய்வதற்கு மற்றும் அனைத்து செறிவாக சமூகத்தினதும் கணக்களிதகையை சான்றுபடுத்துவதற்கு முகாமைத்துவ கருவியொன்றாக பயன்படுத்தப்படுகின்றது. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்கான குறிகாட்டிகள் மற்றும் அடிப்படை தரவுகள் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| **வகைப்படுத்தல்** | **குறிகாட்டிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| தற்போது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் (தொ.பு.தி) தயாரிக்கப்பட்ட குறிகாட்டிகள் | 49 |
| தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய குறிகாட்டிகள் | 26 |
| நிலவும் அல்லது ஏனைய நிறுவனங்களால் தயாரிக்கப்பட வேண்டிய குறிகாட்டிகள் | 131 |
| பிராந்திய / உலகளாவிய குறிகாட்டிகள் | 35 |
| இலங்கைக்கு பொருந்தாத குறிகாட்டிகள் | 03 |
| **மொத்தம்** | **244** |

மூலம்: நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் குறிகாட்டிகளின் நிலை – 2017

(ஈ) தற்போது தொகைமதிப்பு திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள குறிகாட்டிகளின் விபரங்கள் பின்வருமாறு.

| **நோக்கங்கள் (Goal)** | **குறிகாட்டி (Indicators)** |
|---|---|
| நோக்கம் 1 | 1.1.1, 1.2.1, 1.2.2, 1.3.1 |
| நோக்கம் 2 | 2.1.2, 2.2.1, 2.2.2 |
| நோக்கம் 3 | 3.1.1, 3.1.2, 3.2.1, 3.2.2, 3.4.1, 3.4.2, 3.6.1, 3.7.1, 3.7.2, 3.8.2, 3.c.1 |
| நோக்கம் 4 | 4.2.2, 4.4.1, 4.a.1, 4.c.1 |
| நோக்கம் 5 | 5.1.1, 5.2.1, 5.3.1, 5.5.2,5.2.2 |
| நோக்கம் 6 | 6.1.1 |

| | |
|---|---|
| நோக்கம் 7 | 7.1.1 |
| நோக்கம்8 | 8.1.1, 8.2.1, 8.5.2, 8.6.1, 8.7.1 |
| நோக்கம் 9 | 9.1.1, 9.2.1, 9.2.2, 9.3.1 |
| நோக்கம் 10 | 10.1.1, 10.2.1, 10.4.1 |
| நோக்கம் 11 | 11.1.1 |
| நோக்கம் 16 | 16.1.1, 16.1.3, 16.2.2, 16.3.2, 16.4.2 |

**(உ) தமது வியடப்பரப்பிற்காக குறிகாட்டிகள் நிறுவனத்தினாலேயே தயாரிக்கப்பட வேண்டியமை**

மேற்குறிப்பிடப்பட்ட பகுப்பாய்வுகளின் பிரகாரம் 12, 13, 14, 15 மற்றும் 17 ஆகியவற்றுக்காக நிலைபேறான அபிவிருத்தி குறிகாட்டிகளின் பிரகாரம் தொகைமதிப்பு புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் தயாரிக்கப்படவில்லை என்பது மற்றும் இலக்குகள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தமது விடயப்பரப்பின் பிரகாரம் குறிகாட்டிகள் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டும் என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(i) தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் அதன் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் குறிகாட்டிகளின் தர அறிக்கையின் முதலாவது பிரதி 2017 யூலை மாதத்தின் போது 2 ஆவது திருத்தப்பட்ட பிரதி 2017 திசெம்பர் மாதத்தின் போது வெளியிடப்பட்டது. மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டு இற்றைக்கு இரண்டு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் அவர்களால் தயாரிக்கப்பட வேண்டிய எஞ்சிய 26 குறிகாட்டிகளின் தரவுகளை உருவாக்கும் பணிகளில் ஈடுபட்டவாறு உள்ளனர்.

(ii) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட தரவுப் பகுப்பாய்வின் போது சில குறிகாட்டிகளுக்காக அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் (Disaggregation) மட்டம் திருப்திகரமானதாக இல்லாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. உ.ம்

| குறிகாட்டிகள் | குறிகாட்டியின் விபரம் | அனைத்து தரப்பினரும் பிரதிநிதித்துவப்படுத்தும் மட்டம் |
|---|---|---|
| குறிகாட்டி 4.a.1 | பின்வரும் பிரவேசங்களை கொண்ட பாடசாலைகளின் விகிதம் | |
| | (அ) மின்சாரம் | |
| | (ஆ) கல்வி நடவடிக்கைகளுக்காக இணையத்தளம் | கல்வி நடவடிக்கைகளுக்காக இணையத்தளம் (அடிப்படையொன்று இல்லாதிருந்தமை) |
| | (இ) கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக கணனி | |
| | (ஈ) விசேட தேவையுடைய சிறுவர்களுக்காக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொருட்களை வழங்குதல் | விசேட தேவையுடைய சிறுவர்களுக்காக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொருட்களை வழங்குதல் (அடிப்படையொன்று இல்லாதிருந்தமை) |
| | (உ) அடிப்படை குடிநீர் | |
| | (ஊ) ஆண் பெண் சுகாதார வசதிகள் | |
| | (எ) அடிப்படை கைகளை கழுவும் வசதிகள் கழுவும் (wash) குறிகாட்டியின் வரைவிலக்கணத்தின் பிரகாரம் | அடிப்படை கைகளை கழுவும் வசதிகள் (அடிப்படையொன்று இல்லாதிருந்தமை) |
| குறிகாட்டி 8.5.2 | பால் வேறுபாடு, வயது ஆகியவற்றின் அடிப்படையில் விசேட தேவையுடைய நபர்களின் வேலையின்மை விகிதம். | விசேட தேவையுடைய நபர்களுக்கான அடிப்படையொன்று இல்லாதிருந்தமை. |
| குறிகாட்டி 4.c.1 | குறைந்தபட்ச ஒழுங்கமைக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சியுடன் முன்-முதன்மை, முதன்மை, கீழ், இடைநிலை மற்றும் இடைநிலைக் கல்வி ஆசிரியர்களின் விகிதம். | முன் - ஆரம்ப ஆசிரியர்கள் இல்லாதிருந்தமை. |

(iii) நிலைபேறான அபிவிருத்தியினை அடைந்து கொள்வதற்காக நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய 131 குறிகாட்டிகளுக்காக அவற்றை தயாரிப்பதற்கான போதியளவு அறிவு இல்லாத காரணத்தால் பெரும் எண்ணிக்கையிலான குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டிராததுடன், குறித்த நிறுவனங்களுக்கு நிலைபேறான

அபிவிவிருத்தியனை அடைவதற்கான செயன்முன்னேற்றத்தினை அளவிட முடியாதிருந்தது.

(iv) தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் தரவுகளை சேகரித்து தயாரித்தல் மூலம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கான இலக்குகளுக்கான அடிப்படை தரவுகளை பெற்றுக்கொள்வதற்காக கணிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. அதற்காக அந்த தரவுகள் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது பயன்படுத்த எதிர்பார்ப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அததன் பிரகாரம், தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் 1.4.1, 1.4.2, 2.1.1, 2.1.2, 4.3.1, 5.a.1(b), 5.b.1, 5.2.2, 5.4.1, 5.9.1, 6.2.1, 8.5.1, 8.9.1, 16.9.1 ஆகிய குறிகாட்டிகள் எதிர்காலத்தில் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3.4.2 வரவு செலவு திட்டக் குறிகாட்டிகள் - 2019

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் 2018 யூலை 17 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 4/2018 ஆம் இலக்கத்தின் கீழ் வருடாந்த பாதீட்டினை தயாரிப்பதற்கான வழிகாட்டி 2 இன் பிரகாரம் அரச வருமான சேகரிப்பினை உயர்த்துவதன் மூலம் மீண்டெழும் செலவினங்களை தர்க்கப்படுத்தல் மற்றும் மூலதன செலவினங்களுக்கு முன்னுரிமை அளித்தல் 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டளவில் எதிர்பார்க்கப்பட்ட பிரதானமான இலக்குகள் பின்வருமாறு.

| தொடர் இலக்கம் | இலக்கு | 2016 | 2017 | 2018 | 2019 | 2021 இலக்கு |
|---|---|---|---|---|---|---|
| i. | அரச வருமானம் மொத்த தேசிய உற்பத்தியில் 17 சதவீதமாக உள்ளமை | 14.1% | 13.7% | 13.4% | தரவுகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை | 17 |
| ii. | பாதீட்டு பற்றாக்குறை மொத்த தேசிய உற்பத்தியில் 3.5 சததவீதமாக காணப்படல். | 5.3% | 5.5% | 5.3% | தரவுகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை | 3.5 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ே ம ற . | iii. | அரச படுகடன் மொத்த தேசிய உற்பத்தியில் 70 சதவீதமாக காணப்படல். | 78.3% | 76.9% | 82.9% | தரவுகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை | 70 |

படி இலக்குகளை நோக்கிய பயணத்தினை பரீட்சிக்கும் போது 2021 ஆம் ஆண்டின் போது இலக்குகளை அடைந்துகொள்வதற்காக உரிய பொறுப்பு கூற வேண்டிய நிறுவனங்கள் தமது திட்டங்களை அதன் பிரகாரம் தயாரிக்க வேண்டும். நிலவும் குறிகாட்டிகளின் அடிப்படையில் நிலவும் சதவீதங்கள் அவ்வளவு திருப்திகரமான நிலையினை காண்பிக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள்

INTOSAI நியம இலக்கம் 5130 இன் 2.11 இன் கீழ் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சிறந்த மூலோபாயமாவது அடையப்பட வேண்டிய பெறுபேற்றிற்கான இலக்கினை நிர்ணயிப்பது ஆகும். இலங்கையும் பெருளாதார, சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தி நிலைமைகளை அளப்பதற்காக குறிகாட்டிகளை தயாரித்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அந்த குறிகாட்டிகளின் நிலை பின்வருமாறு ஆகும்.

**(அ) <u>பேரண்ட பொருளாதார செயற்படுதன்மை</u>**

| தொடர் இலக்கம் | குறிகாட்டி | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| ------------- | ------------- | ------- | ------- | ------- |
| i. | ஏற்றுமதி வருமானம் - ஐ.அ.டொலர் மில்லியன் | 10,310 | 11,360 | 11,889 |
| ii. | இறக்குமதி செலவினம் - ஐ.அ.டொலர் மில்லியன் | 19,400 | 20,979 | 22,232 |
| iii. | சென்மதி நிலுவைப் பற்றாக்குறை - ஐ.அ.டொலர் மில்லியன் | (500) | 2068 | (1,102) |
| iv. | செலாவணி வீதம் - (ஐ.அ.டொலர் மில்லியன்) வருடாந்த சராசரி | 145.6 | 152.4 | 162.5 |
| v. | அரச படுகடன் - ரூபா பில்லியன் | 9,387.3 | 10,313.04 | 11,977.5 |
| vi. | அரச படுகடன் மொ.உ.உ. சதவீதமாக | 78.3 | 76.9 | 82.9 |
| vii. | தனநபர் வருமானம் ஐ.அ.டொ. | 3,782 | 3,396 | 3,991 |
| viii. | அரச வருமானம் - ரூபா பில்லியன் | 1,693.5 | 1,839.5 | 1,932.4 |

| | | | | |
|---|---|---|---|---|
| ix. | அரச வருமானம் - மொ.உ.உ. சதவீதமாக | 14.1 | 13.7 | 13.4 |
| x. | அரச செலவினம் - ரூபா பில்லியன் | 2,333.9 | 2,573 | 2,693.2 |
| xi. | அரச செலவினம் மொ.உ.உ. சதவீதமாக | 19.5 | 19.2 | 18.6 |
| xii. | பாதீட்டுப் பற்றாக்குறை - ரூபா பில்லியன் | (640.3) | (733.4) | (760.7) |
| xiii. | பாதீட்டு பற்றாக்குறை - மொ.உ.உ. சதவீதமாக | (5.3) | (5.5) | (5.3) |

மூலம் - இலங்கை மத்திய வங்கி அறிக்கை

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நோக்கி பயணிக்கும் போது செயன்முன்னேற்றத்தினை அளப்பதற்காக பயன்படுத்தக்கூடியதுடன், அதன் மூலம் இலங்கையின் நிலையை அளவீடு செய்ய முடியும். மேற்படி குறிகாட்டிகளின் பிரகாரம் இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பில் சிக்கல்கள் நிலவுவதாக அவதானிக்கப்பட்டது.

### 3.4.4 தரவுகளை கண்காணித்தல் மற்றும் பொறுப்பாதல்

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 17 இன் 18 இலக்குகளின் பிரகாரம் 202 ஆம் ஆண்டளவில் ஆகக் குறைந்தது நாடுகள் உயர் தரத்திலான உரிய முறையில் வெளியிடப்படும் நம்பகத்தன்மையான தரவுகள், வருமானம், ஆண் பெண் பாலினம், வயது, இனம், சாதி, குடியேற்ற நிலை, அங்கவீனமடைந்துள்ளமை,பொருளியல் இட அமைவு ஆகியவற்றின் அடிப்படையில் பிரிவினையை பராமரிக்க தேவையான திறன்களை வலுப்படுத்துவது அவசியம். ஆனால் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தில் 2020 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் 169 நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்காக 49 குறிகாட்டிகளும் அவற்றிற்கான அடிப்படை தரவுகளும் மாத்திரம் ஆகும்.

**(அ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் செயன்முன்னேற்றத்தினை அளவிடல்**

17 நோக்கங்களுக்காக 19 இலக்குகளின் கீழ் 2030 ஆம் ஆண்டளவில் தற்போது நிலவும் நடைமுறைகளை பயன்படுத்தி மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு மேலதிகமாக நிலைபேறான அபிவிருத்தியின் செயன்முன்னேற்றத்தினை அளவீடு செய்வதற்காக அளவீடுகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் புள்ளிவிபரவியல் இயலளவினை கட்டியெழுப்புதலின் கீழ் இலங்கையின் நிலைமை பின்வருமாறு ஆகும்.

**(ஆ) பொருளாதார வளர்ச்சி**

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமான கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | பொருளாதார அபிவிருத்தி | 2017-2020 அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் இலக்குகள் |
|---|---|---|
| 2015 | 4.8 | 4.8 |
| 2016 | 4.5 | 5.5 |
| 2017 | 3.4 | 6.0 |
| 2018 | 3.2 | 6.5 |
| 2019 | 2.7 | 7 |

மூலம்: மத்திய வங்கி ஆண்டறிக்கை

பொருளாதார அபிவிருத்தி கிரமமாக குறைவடைந்தவாறு காணப்படுவதுடன் அது அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (2017-2020) இலக்குகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் எதிர்பார்த்தி பொருளாதார வளர்ச்சி கடடந்த காலத்தில் கிடைத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) தெற்காசிய வலயத்தினுள் ஆகக் குறைந்த பொருளாதார வளர்ச்சியுடனான நாடு எனும் நிலையை இலங்கை அண்மிய காலத்தில் அடைந்திருந்தது. விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| நாடு | 2017 ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சி |
|---|---|
| வங்காளதேசம் | 7.3 |
| இந்தியா | 7.2 |
| சீனா | 6.9 |
| மலேசியா | 5.9 |
| பாகிஸ்தான் | 5.7 |
| பூட்டான் | 4.6 |
| தாய்லாந்து | 3.9 |
| இலங்கை | 3.4 |

மூலம்: உலக வங்கி குறிகாட்டிகள் - 2019

**3.4.5 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் குறிகாட்டிகளின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளின் செயன்முன்னேற்றம்**

**(அ) செயன்முன்னேற்றத்தினை அளவீடு செய்யும் நடைமுறையொன்றினை ஏற்படுத்துதல்**

INTOSAI நியம இலக்கம் 5130 இன் 2.12 மற்றும் 2.13 இன் பிரகாரம்அடிப்படை தரவுகள் மற்றும் குறிகாட்டிகள் சர்வதேச குறிகாட்டிகளுக்கு இணங்குகின்றமை,குறிகாட்டிகளில் குறிக்கோள்கள், அடிப்படை தரவுகளின் நம்பகத்தன்மை, இலக்குகளை அடைவதற்கான நேரம், அடைவதற்கான அளவீட்டு, விளைவுகளை அடைவதற்கான பொறுப்புக்கூறல், விளைவு இலக்குகளுடன் நல்லிணக்கம் மற்றும் முடிவுகளைப் புகாரளித்தல் (அரசியலமைப்பிற்கு, பொதுமக்களுக்கு) இருக்க வேண்டும். இது சம்பந்தமாக, 2019 டிசம்பர் வரை, திட்டவட்டமான வழிமுறை எதுவும் நிறுவப்படவில்லை.

**(ஆ) நிலவும் குறிகாட்டிகளின் பிரகாரம் செயன்முன்னேற்றம்**

அதன்படி, தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்திற்கு சொந்தமான49 குறிகாட்டிகளில், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் அடைந்த முன்னேற்றம் நோக்கம் 1,2,3,4,6,7 ஆகியவற்றில் மட்டுமே திருப்திகரமாக இருந்தது. 5,8,9,10,11 இன் முன்னேற்றம் திருப்திகரமாக இல்லை. மேலும், 12,13,14,15,16,17 குறிக்கோள்களின் செயன்முன்னேற்றத்தினை அளவிட குறிகாட்டிகள் மற்றும் அடிப்படை தரவு இல்லாதது காணப்பட்டது. விவரங்கள் பின் இணைப்பு 6 இல் காட்டப்பட்டுள்ளன.

**3.4.6 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நோக்கி பயணிக்கும் செயன்முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்வதற்கான செயலாற்றல் குறிகாட்டிகளின் பயன்பாடு**

---

**(அ) சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள்**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அண்மிக்கும் பரிசோதனைக்காக அரச நிறுவனங்களின் செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI) பயன்படுத்த இயலும். 2018 ஆம் ஆண்டு முதல் இலங்கை அரச பாதீட்டு மதிப்பீடுகளின்

அபிவிருத்தி செயற்பாடுகளில் (செயற்திட்டங்களில்) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் பிரதான இலக்குகளுக்கு மேலதிகமாக பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் 2017 ஆம் ஆண்டின் யூலை 25 ஆந் திகதி 2/2017 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கை 3 இன் பிரகாரம்செயலாற்றலினை அடிப்படையாக கொண்ட பாதீட்டு நடைமுறையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் பாதீடு கடந்த வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட பூச்சிய அடிப்படையின் அனுபவத்தினை அடிப்படையாக கொண்டு செயலாற்றலினை அடிப்படையாக கொண்ட பாதீட்டு முறைமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் இலக்கம் 4 இன் பிரகாரம், இறுதி பெறுபேறுகள் மற்றும் ஒப்பிடப்பட்ட பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளை (KPI) திட்டவட்டமாக நிர்ணயிக்கக்கூடிய மற்றும் அளவிடக்கூடிய பெறுபேறுகளை அடைந்து கொள்வததற்காக வளங்களை ஒதுக்கீடு செய்தல் செயலாற்றலினை அடிப்படையாக கொண்ட பாதீட்டு முறைமையின் கீழ் இடம்பெறுகின்றது. நிதி மற்றும் வெகுசன ஊடக் அமைச்சின் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதிய 4/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையுடைய வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினை தயாரிப்பதற்கான வழிகாட்டி 3 இன் கீழ் செயலாற்றலினை அடிப்படையாக கொண்ட பாதீடு மற்றும் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளின் கீழ் 2019 ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

**(ஆ) செயலாற்றல் குறிகாட்டிகளின் செயன்முன்னேற்றத்தினை அளவீடு செய்தல்**

அமைச்சுகளினால் தமது செயற்திட்டங்களுக்குரிய நிதியினை கோரும் போது குறித்த அமைச்சினால் செயலாற்றல் குறிகாட்டிகளின் பிரகாரம் செயன்முன்னேற்றம் அளவீடு செய்யப்பட்டு அது தொடர்பில் தேசிய வரவு செலவு திட்டத் திணைக்களத்திற்கு அறிக்கையிடல் மற்றும் அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் தேசிய வரவு செலவு திட்டத் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீடு இடம்பெற வேண்டும். மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் தொடர்பில் செயன்முன்னேற்றத்தினை அளவீடு செய்வதற்காக தேசிய வரவு செலவு திட்டத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு கிடைத்த பதில்களின் பிரகாரம் அந்தந்த அமைச்சுகளுக்குரிய செயலாற்றல் குறிகாட்டிகள் தேசிய வரவு செலவு திட்டத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததாகவும், அதன் பிரகாரம், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது செயற்திட்டங்களுக்குரிய செயலாற்றல் குறிகாட்டிகள் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளததாக குறிப்பிடப்பட்டிருந்தது. செயலாற்றல் குறிகாட்டிகளின் செயன்முன்னேற்றம் உரிய வரிசை அமைச்சினால் அளவிடப்பட வேண்டும் என தேசிய வரவு

செலவு திட்டத் திணைக்களம் குறித்த பதிலில் குறிப்பிட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய செயலாற்றல் குறிகாட்டிகளில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் செயன்முன்னேற்றம் தேசிய வரவு செலவு திட்டத் திணைக்களத்தினால் அல்லது உரிய அமைச்சினால் அளவீடு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.4.7 சுய தேசிய மீளாய்வு

---------------------------------

2017 ஆம் ஆண்டின் போது நிலைபேறான அபிவிருத்தி மற்றும் நெகிழ்ச்சியான சமூகமொன்றாக மாற்றுதல் எனும் தலைப்பின் கீழ் (Transformulation towards sustainable and resilient societies) இலங்கை அதன் முதலாவது சுய தேசிய மீளாய்வினை நிலைபேறான அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் 2018 யூலை மாதத்தின் போது ஐக்கிய நாடுகளின் மேல் மட்ட அரசியல் மீளாய்விற்காக சமர்ப்பித்திருந்தது.அந்த அறிக்கையின் பிரகாரம் இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 1 முதல் 16 வரையான செயன்முன்னேற்றம் தொடர்பில் மீளாய்வு செய்யும் போது நோக்கம் 1 முதல் 4 வரையிலும் செயன்முன்னேற்றமானது திருப்திகரமான மட்டத்தில் காணப்படுவதுடன், நோக்கம் 5 முதல் 12 வரையிலும் செயன்முன்னேற்றமானது கருத்திற்கொள்ளக்கூடிய அளவில் காணப்பட்டாலும் நோக்கம் 13 முதல் 16 வரையிலும் செயன்முன்னேற்றமானது மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. நோக்கம் 17 தொடர்பான அவதானிப்புகள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. தேசிய சுய மதிப்பீட்டினுள் இலங்கையை நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நோக்கி அண்மிப்பதற்குரிய இலக்குகளை அடைந்து கொள்ளல் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் போது அவதானிக்கப்பட்ட விசேடமான விடயங்கள் பின்வருமாறு.

வறுமை ஒழிப்பிற்கான சர்வதேச குறிகாட்டியின் கீழுள்ள சனத்தொகை குறைவான போதிலும், தேசிய வறுமை வீதம் குறைவான மட்டத்தில் காணப்பட்ட போதிலும் பிராந்திய முரண்பாடுகள் நிலவுதல், வறுமையான நபர்கள் இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாதல், காலநிலை மாற்றங்களினால் உணவு உற்பத்தி குறைவடைதல், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்தின் பங்கு குறைவடைதல், ஆராய்ச்சிகள் குறைவடைதல், தாய் மரண வீதம் குறைவடைந்த போதிலும் பிராந்திய முரண்பாடுகள் நிலவியமை,பாலியல் கல்வி தொடர்பான அறிவு குறைவான மட்டத்தில் காணப்படல், உயர்தரம் கற்கும் மாணவர்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் கலைத்துறையினை தெரிவு செய்தல்,கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்காக ஆசிரியர்களின் பற்றாக்குறை, பெண்களின் தொழில் பங்களிப்பு குறைவடைதல், சம்பளம் பெறாத

இல்லத்தரசிகளின் சதவீதம் அதிகரித்தல், பாராளுமன்றத்தில் பெண்களின் பங்களிப்பு குறைவடைதல், பெண்களின் நிறைவேற்றுத்தர சேவையின் தொழில்வாய்ப்புகள் குறைவடைதல், குடிநீரின் தரம் குறைவடைதல் காரணமாக நோய்கள் ஏற்படல், மிள் உருவாக்க சக்தி மூலங்களின் சதவீதம் குறைவடைதல், கல்வி கற்காத, பயிற்சி பெறாத மற்றும் வேலைவாய்ப்பற்ற இளைய சனத்தொகை அதிகரித்தல், வெளிநாட்டு சந்தையில் நுழைதல் கடினமாதல், அபிவிருத்தி மானியங்கள் குறைவடைதல், உலக அமைப்புகளில் இலங்கையின் பிரதிநிதித்துவம் குறைவடைதல், ஏற்றுமதி பல்வகைப்படுத்தப்படாமை, திட்டமிடப்படாத நகர அபிவிருத்தி, நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகள் தொடர்பான மக்களின் அறிவு குறைவாக காணப்படல், கழிவு முகாமைத்துவம் நலிவடைதல், காலநிலை விபத்துகள் அதிகரித்தல், காடுகள், சமுத்திரம் மற்றும் கடற்கரை பாதுகாப்பு சட்டங்களில் நலிவுகள் காணப்படல், சுற்றாடல் கட்டமைப்பு தொடர்பான தகவல்கள் குறைவடைதல், சட்டங்கள் போதியளவில் காணப்படாமை, நிறுவனங்களுக்கிடையேயான தொடர்புகள் குறைவாக காணப்படல், செயன்முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்வதற்காக நானதுவரையாக்கப்பட்ட தகவல்கள் இல்லாதிருந்தமை, அரச மற்றும் தனியார் துறையின் தகவல்களை ஒன்றுதிரட்டும் தேசிய தரவுக் கட்டமைப்பொன்று காணப்படாமை,ஈரவலய அழிவடைதல் சர்வதேச குறிகாட்டியில் இலங்கையின் நிலையானது அண்மிய காலங்களில் உயர்வான பெறுமதியினை கொண்டிருந்தது. விபரங்கள் பட்டோலை 6 இல் காண்பிக்கப்பட்டுள்ளது. சுய தேசிய மீளாய்வில் உள்ளடங்கியுள்ள பிரச்சினைகளை இனங்கண்டு அஅவற்றுக்கு தீர்வுகளை கண்டறிவதன் மூலம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைய முடியும். அந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள விடயங்களுக்கமைய அரச நிறுவனங்கள் தமது விடயப்பரப்பினுள் குறித்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை உள்ளடக்கி அதற்காக குறிகாட்டிகள் மற்றும் அடிப்படை தரவுகளை கட்டியெழுப்புவதன் மூலம் தமது நிறுவனங்களின் செயன்முன்னேற்றத்தினை வருடாந்தம் அளவிட முடியும்.அந்த குறிகாட்டிகள் மற்றும் அடிப்படை தரவுகளை அறிக்கையிடும் பொறுப்பு காணப்படுவதுடன், நிலைபேறான அபிவிருத்தி சபைக்கு அனுப்புவதன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த நிலைபேறான அபிவிருத்தியிலான செயன்முன்னேற்றத்தினை அளவிட முடியும். அந்த அறிக்கையின் விடயங்களின் பிரகாரம் பெரும்பாலான விடயங்களுக்கு உரியதாக தேசிய ரீதியில் குறிகாட்டிகள் மற்றும் அடிப்படை தரவுகள் காணப்படவில்லை. அதன் பிரகாரம் இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நோக்கி அண்மிக்கும் செயன்முன்னேற்றம் எதிர்வரும் வருடங்களின் சர்வதேசத்திற்கு மற்றும் நாட்டின் பாராளுமன்றத்திற்கு மற்றும் நாட்டின் மக்களுக்கு தெரிந்துகொள்ளும் பொருட்டு முன்வைப்பதில் சிக்கல்கள் எழக்கூடும்.

## 04. பரிந்துரைகள்

4.1 அரச நிறுவனங்கள் அவர்களின் விடயப்பரப்பிற்கு இணங்க நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் மூலோபாயங்களை அபிவிருத்தி செய்வதற்குரிய தகவல்களை நிலைபேறான அபிவிருத்தி சபைக்கு வழங்குவதன் மூலம் நிலைபேறான அபிவிருத்தி தேசிய கொள்கை மற்றும் மூலோபாயங்களை தயாரிக்கும் நடைமுறையை துரிதப்படுத்தல்.

4.2 தேசிய பாதீட்டின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI) உரிய நிறுவனங்களுடன் தொடர்புபட்டு அளவிடும் முறையொன்றினை அபிவிருத்தி செய்தல்.

4.3 தேசிய அபிவிருத்தி தொடர்பான கொள்கையினை உருவாக்கும் போது 2019 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் சௌபாக்கியத்தின் நோக்கினுள் நிலைபேறான அபிவிருத்திக்கான தேசிய திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை அமைச்சுகளை மீள ஒழுங்கமைத்தல் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி சபையினால் கண்காணித்தல்.

4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வததற்காக சுற்றாடல் அம்சம் தொடர்பில் அதிக கவனம் செலுத்துதல்.

4.5 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடையும் போது விசேட தேவையுடைய நபர்களுக்கு வழங்கப்படும் நலன்புரி வசதிகளை அதிகரித்தல்.

4.6 இலக்குகளை அடையும் போது வளங்களை கோருவதற்கு இலகுபடுத்தும் நோக்கில் அரச நிறுவனங்களுக்கு தெளிவான வகையில் சுற்றறிக்கைகளை வெளியிடல்.

4.7 அரச நிறுவனங்களஜனால் தயாரிக்கப்பட வேண்டிய 131 குறிகாட்டிகளை தாயாரிப்பதற்காக மதியுரைகளை வெளியிடல், பயிற்சியினை வழங்குதல் மற்றும் அது தொடர்பில் பின்தொடர்தல்.

4.8 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய 26 குறிகாட்டிகளினை தயாரிக்கும் நடைமுறையை துரிதப்படுத்தல்.

4.9 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்காக அனைத்து அரச நிறுவனங்களினதும் இணைப்பினை மேம்படுத்தல்.

4.10 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஒட்டுமொத்த செயன்முன்னேற்றத்தின் கண்காணிப்பு மற்றம் மதிப்பீடு செய்வதற்குரிய

வகையில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பொறிமுறையொன்றினை அபிவிருத்தி செய்தல்.

4.11 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக செயன்முன்னேற்றத்தினை கால அடிப்படையில் அறிக்கையிடும் முறைமையொன்றினை தயாரித்தல் மற்றும் அவை மக்களுக்கு மற்றும் அதனுடன் தொடர்புடைய அக்கறை செலுத்தும் தரப்பினருக்கு பெற்றுக்கொள்ள நடைமுறையொன்றினை தயாரித்தல்.

## 05. தீர்மானம்

இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான தேசிய கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை தயாரிக்காமை, அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தரவுகள் இல்லாதிருந்தமை, நிறுவன மட்டத்தில் மற்றும் தேசிய மட்டத்தில் செயலாற்றல் குறிகாட்டிகளை தயாரித்து அளவிடப்படாமை, 2018 ஆம் ஆண்டு வரையிலும் இலங்கையின் நோக்கு (2025) வரையிலும் குறிப்பிடப்பட்டிருந்த 04 நோக்கங்களில் 03 நோக்கங்களும் உரிய முறையில் வெற்றிகரமான அடைந்துகொள்ள முடியாமை, நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் காணப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு 2018 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் முதல் செயற்படாமை, நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் ஒட்டுமொத்த செயன்முன்னேற்றத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்விற்கான பொறிமுறையொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், இலங்கைக்கு நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இன்னும் இருப்பது சுமார் 10 வருட காலம் மாத்திரம் ஆகும் என்பதால் நிலைபேறான தேசிய கொள்கைக்கு பொருந்தும் வகையில் 2019 ஆம் ஆண்டின் போது சுபீட்சத்தின் நோக்கத்தினுள் தேசிய திட்டமொன்றினை தயாரிக்கும் தேவைப்பாடு சுட்டிக் காண்பிக்கப்படுகின்றது.

ஒப்பம்./டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## பின்னிணைப்புகள்

**பட்டோலை 01**

### 2019 பாதீட்டு மதிப்பீடு தயாரிப்பதற்குரிய நிதியேற்பாடுகள்

| தொடர் இலக்கம் | அமைச்சு | செயற்திட்டம் | நிதியேற்பாடு ரூபா மில்லியன் | இலக்கு | செயலாற்றல் குறிகாட்டி | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்குரிய இலக்குகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | நிதி அமைச்சு | சிறு மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான கடன் வழங்குதல் | 9,330 | 1.4 | கடன் பயன்பாட்டு சதவீதம் | பொருளாதார வளங்களுக்கு அனைவருக்கும் பிரவேச உரித்தினை உறுதிப்படுத்தல். |
| | | ஜய இசுறு கடன் | 3,000 | 1.4 | மேற்படி | மேற்படி |
| | | சொந்துரு பியச கடன் | 1000 | 1.4 | நிர்மாணித்த வீடுகளின் எண்ணிக்னை | மேற்படி |
| | | ரன் அஸ்வனு கடன் | 900 | 1.1 | வழங்கிய கடன் அளவு | வறுமையை ஒழித்தல் |
| | | | | 1.2 | புதிய தொழில்நுட்ப பயன்பாட்டிற்கு பழக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை | வறுமையை ஒழித்தல் |
| | | ரிய சக்தி கடன் | 500 | 1.4 | கொள்வனவு செய்யப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை | பொருளாதார வளங்களுக்கு அனைவருக்கும் பிரவேச உரித்தினை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | உறுதிப்படுத்தல். |
| 2. | தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள குடியமர்த்தல், புனர்வாழ்வளித்தல், கிழக்கு மாகாண அபிவிருத்தி, தொழில்சார் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு | நீர், மின்சாரம், விவசாய வசதிகள், வீதிகள் | 2500 | 1.4 | நலன்களை பெற்றுக்கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை, வாழ்க்கைத்தரத்தினை உயர்த்திக்கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை | - மேற்படி- |
| | | கம் பெரலிய துரிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 48,000 | 1.4 | நிர்மாணிக்கப்பட்ட நீர் நிலையங்கள், கால்வாய்கள், விளையாட்டு மைதானங்கள், சிறுவர் பூங்காக்கள், விகாரை வீடுகளின் எண்ணிக்கை. | - மேற்படி- |
| 3. | விவசாய, கிராமிய பொருளாதார அலுவல்கள், அபிவிருத்தி, நீர்ப்பாசன, கடற்றொழில் மற்றும் நீரகவளமூல அமைச்சு | விவசாய அபிவிருத்தி செயற்திட்டம் | 520 | 1.1 | செயற்திட்டத்திலிருந்து நேரடியாக நலன்களை பெறும் எண்ணிக்கை | வறுமையை ஒழித்தல் |
| 4. | காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு | பிம் சவிய நிகழ்ச்சித்திட்டம் | 420 | 1.4 | அளக்கப்பட்ட காணித்துண்டுகளின் எண்ணிக்கை, தீர்மானிக்கப்பட்ட காணித்துண்டுகளின் எண்ணிக்கை. | பொருளாதார வளங்களுக்கு அனைவருக்கும் பிரவேச உரித்தினை உறுதிப்படுத்தல். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5. | ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | சமுர்த்தி வேலைத்திட்டம் | 50,000 | 1.1 | சமுர்த்தி பணம் வழங்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | வறுமையை ஒழித்தல் |
| | | சமுர்த்தி பெறுநர்களை வலுவூட்டல் | 750 | 1.4 | வலுவூட்டப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | பொருளாதார வளங்களுக்கு அனைவருக்கும் பிரவேச உரித்தினை உறுதிப்படுத்தல். |
| | | முதியவர்களுக்கு பணம் வழங்குதல். | 10000 | 1.1 | பணம் பெற்றுக்கொண்ட முதியவர்களின் எண்ணிக்கை | வறுமையை ஒழித்தல் |
| 6. | அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தகம் தொடர்பான அமைச்சு | காணிகள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | 100 | 1.4 | உள்ளடக்கப்பட்ட காணிகளின் சதவீதம் | - மேற்படி- |
| | | | ------------ | | | |
| | | | 127,020 | | | |
| | | | ======= | | | |

**பட்டோலை 02**

## 2018 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் கருத்திற்கொள்ளப்படாத இலக்குகள்

| தொடர் இலக்கம் | நோக்கம் | நோக்கங்களை இனங்கண்ட அமைச்சுகளின் எண்ணிக்கை | நோக்கத்திற்குரிய இலக்குகளின் எண்ணிக்கை | இனங்காணப்படாத இலக்குகளின் எண்ணிக்கை | இனங்காணப்படாத இலக்குகளுக்குரிய விபரங்கள் |
|---|---|---|---|---|---|
| i. | 1 | 5 | 7 | 2 | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மிப்பதற்கு வளங்களை பெற்றுக்கொள்ளல்.<br>தேசிய, வலய, சர்வதேச மட்டத்திலான கொள்கைகளின் உருவாக்கம். |
| ii. | 2 | 7 | 8 | 2 | டோஹார் நிகழ்ச்சி நிரல் பிரகாரம் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.<br>உணவு உற்பத்தி சந்தையின் உருவாக்கம். |
| iii. | 3 | 7 | 13 | 4 | தொற்றாத நோய்கள், நோயாளிகள் மற்றும் இறப்புகளைக் குறைத்தல்.<br>பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைகளை மேம்படுத்துதல்<br>புகையிலை பயன்பாட்டின் கட்டுப்பாடு<br>உடல்நல அபாயங்கள் குறித்த முன் எச்சரிக்கையை வலுப்படுத்துதல். |
| iv. | 4 | 9 | 10 | 1 | வெளிநாட்டு உதவித்தொகை அதிகரித்தல் |
| v. | 5 | 4 | 9 | 5 | சமூக சேவைகளின் பாதுகாப்பு, கட்டணம் செலுத்தாத சேவைகளுக்கான உள்கட்டமைப்பு ஆகியவற்றை வழங்குவதன் நன்மைகள்<br>பெய்ஜிங்கிற்கு ஏற்ப பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார வசதிகளை வழங்குதல்.<br>அனைவருக்கும் வளங்களை வழங்குதல்<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை வழங்குதல்.<br>பெண்கள் அதிகாரமளித்தல் கொள்கையை உருவாக்குதல் |
| vi. | 6 | 5 | 8 | 2 | நீர் தொடர்பான உயிரியல் அமைப்புகளின் பாதுகாப்பு<br>நீர் மற்றும் சுகாதார திட்டங்களில் உள்ளூர் மற்றும் சமூக பங்களிப்பை ஊக்குவித்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| vii. | 7 | 3 | 4 | 1 | வலுச்சக்தி செயலாற்றலினை அதிகரிக்கும் விகிதத்தை இரட்டிப்பாக்குகிறது. |
| viii. | 8 | 7 | 12 | 6 | வள பயன்பாட்டு செயல்திறனை மேம்படுத்துதல், வள இழப்பைத் தடுத்தல்.<br>கல்வி மற்றும் வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களின் எண்ணிக்கையை குறைத்தல்<br>பாதுகாப்பான சேவைகளை மேம்படுத்துதல்<br>உள்ளூர் நிதி நிறுவனங்களை பலப்படுத்துதல்<br>தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்தல்<br>சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வேலைவாய்ப்பு ஒப்பந்தங்கள் மூலம் வேலைவாய்ப்பை உருவாக்குதல். |
| ix. | 9 | 12 | 8 | 2 | நிதி, தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு மற்றும் உள்ளூர் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி<br>ஆராய்ச்சி, புத்தாக்கம், தொழில் பல்வகைப்படுத்தல், தயாரிப்புகளுக்கான மதிப்பு கூட்டல் ஆகியவற்றுக்கான கொள்கைகளை உருவாக்குதல் |
| x. | 10 | 5 | 10 | 7 | உத்தரவாதங்கள், ஒப்பந்தங்கள், சமூக பாதுகாப்புக் கொள்கைகளின் பயன்பாடு<br>சட்ட நிலையை மேம்படுத்துதல்<br>உலக நிதி சந்தையை கண்காணித்தல்<br>உலக அமைப்புகளிலிருந்து பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்ளல்.<br>இடம்பெயர்வு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.<br>உலக வர்த்தக அமைப்புகளுக்கமைய செயற்படல்.<br>நேரடி அந்நிய முதலீடு, உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி, இடம்பெயர்வு பணம் 3%இனை விட குறைத்தல் மற்றும் பணம் அனுப்புவதை 5%இனை விடகுறைத்தல். |
| xi. | 11 | 6 | 10 | 5 | இயற்கை பேரழிவுகளிலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு ஏற்படும் சேதத்தை குறைத்தல்<br>பச்சை இடைவெளிகளை உருவாக்குதல்<br>தேசிய, பிராந்திய மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் மூலம்<br>பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் இணைப்புகளை நிறுவுதல்.<br>பேரழிவைக் குறைக்க செண்டியல் திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் பேரழிவு தடுக்கும் நகரங்கள் மற்றும் குடியிருப்புகளை நிர்மாணித்தல்<br>உள்ளூர் பேரழிவுகளைத் தாங்க கட்டிடங்களை நிர்மாணித்தல். |
| xii. | 12 | 6 | 11 | 6 | தனிநபர் உணவு வீணாவதைக் குறைத்தல்,அறுவடைக்கு பின்னரான இழப்புகளைக் குறைக்க தனியார் துறையுடன் தகவல்களை ஒருங்கிணைத்தல்<br>நிலைபேறான பெறுகை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | நிலைபேறான அபிவிருத்தியை அனைவருக்கும் பெற்றுக்கொடுத்தல்.<br>நிலையான நுகர்வு மற்றும் உற்பத்திக்கான அறிவியல், தொழில்நுட்ப திறனை வழங்குதல்.<br>நிலைபேறான சுற்றுலாதுறை<br>தீங்கு விளைவிக்கும் மானியங்களை நீக்குதல். |
| xiii. | 13 | 3 | 5 | 4 | தேசிய திட்டத்தினுள் காலநிலை மாற்றத்தின் பாதகமான நிலைமைகளை குறைக்கும் நடவடிக்கைகளை உள்ளடக்குதல்.<br>முன்னெச்சரிக்கை அறிவிப்பினை நடைமுறைப்படுத்தல்.<br>ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற சாசனத்தின் கவனம் செலுத்தல்.<br>பசுமை வானிலை நிதியம் நிறுவுதல். |
| xiv. | 14 | 2 | 10 | 8 | கடல் மாசடைதலைக் குறைத்தல்.<br>கடல் மற்றும் கடலோர நிலையான சுற்றுச்சூழல் முகாமைத்துவம்.<br>கடல் அமிலமயமாக்கலைக் குறைத்தல்.<br>நிலைபேறான வகையில் மீன் வளங்களின் பாவனை.<br>கடலோர மற்றும் கடல் பகுதிகளின் 10%பாதுகாப்பு.<br>உலக வர்த்தக அமைப்பிலிருந்து மீன்வள மானியங்களைப் பெறுதல்<br>கடல் வளங்களிலிருந்து பொருளாதார நன்மைகளை அதிகரித்தல்<br>பெருங்கடல் அறிவியல் ஆணைக்குழுவின் நடைமுறைகளைப் பின்பற்றி சிறு மீனவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல். |
| xv. | 15 | 2 | 12 | 9 | பாலைவனமாக்கலை நீக்குதல்.<br>வரட்சி மற்றும் வெள்ளம் காரணமாக ஏற்படும் சேதத்தை மீட்டமைத்தல்.<br>மலைப்பகுதிகளின் உயரியல் பல்வகைத்தன்மையை பாதுகாத்தல்.<br>மரபணு வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் நன்மைகளைப் பகிர்தல்.<br>தாவரங்கள் மற்றும் விலங்குகளை சட்டவிரோதமாக கொண்டு செல்வதைத் தடுத்தல்.<br>நிலம் மற்றும் நீர் சூழல் கட்டமைப்புகளில் வாழும் ஆக்கிரமிப்பு இனங்கள் அகற்றுதல்.<br>சுற்றுச்சூழல் அமைப்புகளின் ஒருங்கிணைப்பு.<br>வன முகாமைத்துவம். |
| xvi. | 16 | 7 | 12 | 9 | வன்முறை மற்றும் தொடர்புடைய மரணங்களை குறைத்தல்.<br>சிறுவர் துஷ்பிரயோகத்தை முடிவுக்குக் கொண்டுவருதல்<br>அனைவருக்கும் நீதி வழங்குதல்.<br>சட்டவிரோத நிதி, ஆயுதக் குறைப்பு.<br>குற்றங்களை ஒழித்தல், திருடப்பட்ட சொத்துக்களை மீட்டல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | இலஞ்சம் மற்றும் ஊழலைக் குறைத்தல்.<br>உலக அளவிலான நிறுவனங்களின் பங்களிப்பை வலுப்படுத்துதல்.<br>வன்முறை, பயங்கரவாதம் மற்றும் குற்றங்களை அகற்ற உயர் நிறுவன திறனை வலுப்படுத்துதல்.<br>பாகுபாட்டைத் தடுக்க சட்டத்தை ஊக்குவித்தல். |
| xvii. | 17 | 3 | 19 | 15 | உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியைப் பெறுதல்.<br>நிதி ஆதாரங்களின் வெளிப்படைத்தன்மை.<br>கடன் அழுத்தத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.<br><br>முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களை நிறுவுதல்.<br>நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை ஊக்குவித்தல்.<br>உலக வர்த்தக அமைப்பின் கீழான சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை ஊக்குவித்தல்.<br>வரி மற்றும் கழிவுகளற்ற திறந்த வர்த்தகம்<br>நிலைபேறான அபிவிருத்தி கொள்கையை உருவாக்குதல்.<br>கொள்கைகளை உருவாக்கல் மற்றும் செயல்படுத்தும் உரிமை<br>நிலைபேறான வளர்ச்சிக்கு சர்வதேச மற்றும் உள்நாட்டு கூட்டாண்மைகளை ஊக்குவித்தல்<br>அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சரியான நேரத்தில் உயர் தரத்திலான தரவுகளை வழங்கப்படுவதனை ஊக்குவித்தல்.<br>அறிவு பகிர்வு (அறிவியல், தொழில்நுட்பம்,புத்தாக்கம்).<br>சூழலுடன் இசைவான தொழில்நுட்பத்தை உருவாக்குதல்.<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி.<br><br>மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு மேலதிகமாக நிலைபேறான அபிவிருத்தி வளர்ச்சியை அளவிடுவதற்கான அளவீட்டு மேம்பாட்டுக்கான திறன் மேம்பாடு. |

## 2019 ஆம் ஆண்டின் போது அமைச்சுக்களால் தயாரிக்கப்படாத இலக்குகள்

| தொடர் இலக்கம் | நோக்கம் | நோக்கங்களுக்குரிய இலக்குகளின் எண்ணிக்கை | இனங்காணப்படாத இலக்குகளின் எண்ணிக்கை | இனங்காணப்படாத இலக்குகளுக்குரிய விபரங்கள் |
|---|---|---|---|---|
| i. | 1 | 7 | 3 | அனைத்து தரப்பினர் தொடர்பிலும் சமுக பாதுகாப்பு முறைமைகளை நடைமுறைப்படுத்தல்.<br>வளங்களை பெற்றுக்கொள்வதை அதிகரித்தல்.<br>வறுமையுடனான நபர்களுக்கு முன்னுரிமையை வழங்கும் தேசிய, வலய, சர்வதேச கொள்கைச் சட்டகத்தினை தயாரித்தல். |
| ii. | 2 | 8 | 4 | மரபணு வளங்களையும் பாரம்பரிய அறிவையும் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் நன்மைகளை அணுகுதல்.<br>விவசாய உற்பத்தியில் இயலளவினை அதிகரித்தல் மற்றும் முதலீட்டை அதிகரித்தல்.<br>தோஹா மேம்பாட்டு நிகழ்ச்சி நிரலின் படி விவசாய ஏற்றுமதி மேம்பாடு.<br>உணவு தயாரிப்பு சந்தைகள் மற்றும் அவற்றின் துணை உற்பத்திகளை முறையாக செயல்படுத்துதல். |
| iii. | 3 | 13 | 7 | தொற்றாத நோய்களினால் ஏற்படும் மரணங்கள் மற்றும் நோயாளிகளை குறைத்தல் மற்றும் மனநல மேம்பாடு<br>மதுபான பயன்பாடு மற்றும் அபாயகரமான மருந்துகளை பயன்படுத்துவதனை தடுப்பதை வலுப்படுத்துதல்.<br>பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைகளுக்கான அனைவரினதும் அணுகல்<br>இரசாயன கழிவு, குடிநீர் மற்றும் மண் மாசுபாடு காரணமாக இறப்பு மற்றும் நோயாளர்களின் எண்ணிக்கையை குறைத்தல்.<br>புகையிலை பாவனையினை தடுத்தல்.<br>மருந்துகளை உற்பத்தி செய்வதற்காக ஆராய்ச்சி உதவிகளை பெற்றுக்கொள்ள வேண்டும். தோஹா பிரகடனத்தின்படி அனைவருக்கும் மருந்துகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்குதல்.<br>உடல்நல அபாயங்கள் குறித்த முன்னெச்சரிக்கை. |
| iv. | 4 | 10 | 2 | நிலைபேறானஅபிவிருத்திக்குகுறியீட்டு ரீதியில் பங்களிப்பு செய்தல்.<br>கல்வி, தொழில் பயிற்சி மற்றும் தகவல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தொழில்நுட்பத்திற்கான புலமைப்பரிசில்களை பெறுதல். |
| v. | 5 | 9 | 6 | பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாட்டை நீக்குதல்.<br>ஊதியம் இல்லாத வீட்டு வேலைகளின் மதிப்பை இனங்காணல்.<br>பெய்ஜிங் செயல் திட்டத்தின் படி பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார உரிமைகளை வழங்குதல்.<br>பொருளாதார வளங்களை அணுக பெண்களுக்கு உரிமை கொடுங்கள்.<br>பெண்களுக்கு தகவல் தொழில்நுட்ப வாய்ப்புகளை வழங்குதல்.<br>பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுப்படுத்தும் கொள்கைகளை உருவாக்குதல். |
| vi. | 6 | 8 | 3 | ஒருங்கிணைந்த நீர்வள முகாமைத்துவம்<br>நீர் தொடர்பான உயிரியல் அமைப்புகளின் பாதுகாப்பு.<br>நீர் மற்றும் சுகாதார வசதிகள் குறித்து சர்வதேச ஒத்துழைப்பை வழங்குதல். |
| vii. | 7 | 5 | 2 | குறைந்த விலையிலான நம்பகமான நவீன எரிசக்தி ஆதாரங்களுக்கான அணுகல்.<br>நவீன மற்றும் நிலையான எரிசக்தி சேவைகளுக்கான உள்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு. |
| viii. | 8 | 12 | 7 | நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி திட்டத்தை செயல்படுத்துதல்.<br>படிக்காத பயிற்சி பெறாத வேலையற்ற இளைஞர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்.<br>குழந்தைத் தொழிலாளர்களை பணியிலமர்த்துவதனை முடிவுக்கு கொண்டுவரல்.<br>கவனமாக பணியிடங்களை மேம்படுத்துதல்.<br>உள்ளூர் நிதி நிறுவனங்களின் இயலளவினை வலுப்படுத்துதல்.<br>உற்பத்தித்திறன் தொடர்பான உதவி, தொழில்நுட்பத்தினை பெற்றுக்கொள்ளல்.<br>சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சர்வதேச தொழிலாளர் மாநாட்டை செயல்படுத்தல். |
| ix. | 9 | 8 | 2 | நிதி தொழில்நுட்ப உதவியினை வழங்கி உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கான அணுகல் |
| x. | 10 | 10 | 5 | உலகளாவிய அமைப்புகளின் தீர்மானங்களின் போது பிரதிநிதித்துவத்தினை செயற்திறனாக்குதல்.<br>புலம்பெயர்வு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.<br>உலக வர்த்தக அமைப்பின் இணக்கப்பாட்டின் பிரகாரம் செயற்படல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிகளை பெற்றுக்கொள்ளல்.<br>பண பரிமாற்ற செலவை 3%விட குறைக்கவும் 5% பணம் அனுப்பும் வழிகளை நீக்குதல். |
| xi. | 11 | 10 | 1 | பேரழிவு அபாயத்தைக் குறைக்க செண்டியல் திட்டக் கொள்கைகளை செயல்படுத்துதல் |
| xii. | 12 | 11 | 09 | நிலையான நுகர்வோர் மற்றும் உற்பத்தி தொடர்பான திட்டத்தை செயல்படுத்துதல்.<br>இயற்கை வளங்களின் நிலையான முகாமைத்துவம்<br>தனிநபர் உணவு வீணாவதைக் குறைத்தல் மற்றும் பிந்தைய அறுவடை இழப்புகளைக் குறைத்தல்.<br>கழிவு முகாமைத்துவம்<br>கழிவு உற்பத்தியைக் குறைத்தல், மீள்சுழற்சி செய்தல் மற்றும் மீள்பயன்பாட்டுக்கு உட்படுத்தல்.<br>நிலைபேறான பயன்பாட்டு அறிக்கைகளின் ஒருங்கிணைப்பு<br>நிலைபேறான பொது பெறுகைகளின் பயன்பாடு<br>நிலையான அறிவை வழங்குதல்<br>நிலையான சுற்றுலாதுறை<br>எரிபொருள் மானியம் வழங்குதல். மானியங்களை முறையாக வழங்குதல். |
| xiii. | 13 | 5 | 4 | தேசிய கொள்கைகளில் காலநிலை மாற்றத்தைக் குறைக்கும் நடைமுறைகளை இணைத்தல்.<br>காலநிலை தொடர்பான முன்னெச்சரிக்கை பணிகளை அதிகரித்தல்.<br>ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற சாசனத்திற்கான ஒப்பந்தத்திற்கு இணங்குதல்.<br>காலநிலை மாற்றத்திற்கான பயனுள்ள திட்டமிடல். |
| xiv. | 14 | 10 | 9 | கடல் மாசு தடுப்பு.<br>கடல் மற்றும் கடலோர சுற்றுச்சூழல் முகாமைத்துவம்<br>கடல் அமிலமயமாக்கலைக் குறைத்தல்.<br>நிலையான மீன் வளங்களின் பயன்பாடு.<br>கடலோர மற்றும் கடல் பகுதிகளின் 10% பாதுகாப்பு<br>அதிகப்படியான மீன்பிடிக்க காரணமான மானியங்களைக் குறைத்தல்.<br>நாடுகளுக்கிடையிலான சமுத்திர விஞ்ஞான ஆணைக்குழுவின் நடைமுறைகளைப் பின்பற்றுதல்.<br>சிறு மீனவர்களுக்கு சந்தைகளுக்கு அணுகல் சந்தர்ப்பங்களை வழங்குதல்.<br>கடல் வளங்களின் பாதுகாப்பு. |
| xv. | 15 | 12 | 9 | நிலத்தின் நிலையான பயன்பாடு.<br>பாலைவனமாக்கலை நீக்குதல்.<br>உயிர்ப்பல்வகைமையை பாதுகாத்தல்.<br>மரபணு வளங்களைப் பயன்படுத்துதல்.<br>சுற்றுச்சூழல் அமைப்புகளில் காணப்படும் ஆக்கிரமிப்பு சக்தி வாய்ந்த உயிரினங்களின் தாக்கத்தை குறைத்தல்<br>சுற்றுச்சூழல் அமைப்புகளின் பல்லுயிர் மதிப்புகளை |

| | | | | |
